ஒஒ/9

# ஆத்ம ஜோதி



ஆனந்த சடாட்சர குரு அவர்கள்



# ஆத்ம ஜோதி

[ஓர் ஆத்மிக மாத வெளியீடு]

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

- சுத்தானந்தர்

ஜோதி - 16 | சோபகிருதுஸு கார்த்திகைமீ 1உ [17-11-63] | சுடர் 1

## பொருளடக்கம்


1. கீதாஞ்சலி 1
2. ஆனந்த சடாட்சர குரு — கவிதை 2
3. ஆனந்த சடாட்சர குரு 3
4. ஆத்ம ஞானி பாயஜீத் பிஸ்தாமி 8
5. விந்தை என்ன? 9
6. சிவானந்தச் சுடர் 10
7. அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் 11
8. உன்னையே அறிந்து பந்தமற்றிருக்குக 14
9. இறைவனின் அற்புத இரகசியம் 17
10. பிராணப் பயிற்சி 18
11. பேரின்பமும் சிற்றின்பமும் 22
12. மகா புருஷ் சுவாமி சிவானந்தர் 24
13. அப்பரின் அருள் வரலாறு 33
14. இருள் கடியும் கதிர்வேலா! 40


## ஆத்மஜோதி சந்தா விபரம்


ஆயுள் சந்தா ரூபா 75.00 வருட சந்தா ரூபா 3.00
தனிப்பிரதி சதம் 30
கௌரவ ஆசிரியர் — திரு. க. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர் — திரு. நா. முத்தையா
''ஆத்மஜோதி நிலையம்'' நாவலப்பிட்டி. [சிலோன்]
தொலைபேசி எண் 353


மகாகவி தாகூரின்

# கீ தா ஞ் ச லி

## 43. இன்ப முத்திரை

முன்புனையான் அறிந்திலதால், பண்பொடுனை
  வரவேற்க முடிந்த தில்லை;
பின்பொருநாள், கும்பலுடன் வந்தவன்நீ
  எனதுளத்தைப் பிடித்த துண்டு!
அன்பரச! அன்றுமுதல் என்வாழ்வில்
  மறைந்தநொடி யனைத்தி லும்,நின்
இன்பமணி முத்திரையை என்றுமழி
  யாவகைநீ இட்ட துண்டு!

இன்றந்த நினைவுகளை எடுத்தெண்ணிப்
  பார்க்கையில்,அவ் வெழிற்க ணம்,ஒவ்
வொன்றிலும்நின் கணையாழி முகர்கண்டு
  துடிக்கின்றேன்; ஒப்பில் லாய்!என்
அன்றையப்புன் சிறுவாழ்வில் அனுபவித்த
  இன்பதுன்ப அலைக ளூடே,
ஒன்றி,அது கலந்துமண்ணிற் சிதறுண்டு
  விட்டதனல், உளம்நோ கின்றேன்!

சிறுமழலை யாய்மண்ணிற் சிற்றில்லம்
  சமைத்தின்பச் சிறுசோ றுக்கிப்
பெருகுவினை யாட்டயர்ந்த வேளையும்,நீ
  எனைவெறுத்துப் பேச வில்லை;
அரியவினை யாட்டறையில் ஆர்வமுடன்
  என்செவிகள் அன்று கேட்ட,
கருணைமலர்க் கழலொலியே உடுக்களில்,இன்
  றெதிரொலிக்கக் காணு கின்றேன்!

— 'பரமஹம்ஸ தாசன்'

# ஆனந்த சடாட்சர் குரு

(முத்து)

முன்புனைக் கண்ட போது
முனிவரன் என்று யானும்
நின்னினை உணராப் பேதை
ஆயினேன் என்ன செய்வேன்
கன்றினுக் கிரங்கும் சேதா
ஆயினை கருணை வள்ளால்
அன்றெனை ஆண்டாய் அல்லையோ
ஆனந்த சடாட்சர குருவே.

தனக்குறு பசிபோல் யார்க்கும்
அப்பசி உண்டென உணர்ந்து
மணக்குறை இன்றி நாளும்
மானிடப் பூசை செய்து
இனத்துறு இயல்பால் யார்க்கும்
இனியனாய் வாழ்ந்து காட்டி
அனைவர்க்கும் அன்புரு வானாய்
ஆனந்த சடாட்சர குருவே.

சரவண முத்து என்னும்
சடாட்சர நாமம் பூண்டோய்
நரர்சுரர் களுக்கு எல்லாம்
நாயக னாகி வந்தோய்
அரகர என்று சொன்னால்
ஆனந்த பாஷ்பம் பொழிந்து
அரகர முருகே ஆனாய்
ஆனந்த சடாட்சர குருவே.



+ + + + + + + + + + + + + + + + + + + + + + + + + + + + + + +

# ஆனந்த சடாட்சர குரு

— ஆசிரியர் —

+ + + + + + + + + + + + + + + + + + + + + + + + + + + + + + +

எனக்குப் பள்ளிப் பருவத்தைக் கடந்துவிட்ட வயது. ஒருநாள் எங்கள் ஊரில் ஒரு பரபரப்பான செய்தியைக் கேள்விப்பட்டேன். ''சரவணமுத்துச் சாமியாரைச் சமாதி வைத்த இடத்தில் நாட்டிய வாழை மறுபக்கமாகத் திரும்பியிருக்கிறது.'' அவருடைய சமாதியின் பொழுது ஏற்பட்ட ஒரு அற்புதம் அவ்வூர் மக்கள் எல்லாரையும் அச் சமாதிக்கு இழுத்து வைத்து விட்டது. சுவாமிகள் பூதவுடல் கொண்டுலாவும் போது சுவாமிகளைப் பயன் படுத்தத் தெரியாத மக்கள் எல்லாரும் அற்புதம் பார்க்க ஓடிச் சென்று சமாதியை அதன் மூலமாகத் தரிசனை பெற்றுத் திரும்பினார்கள்.

நீர்வேலியைச் சேர்ந்த வல்லிபுரம் என்பவர் குப்பிழானைச் சேர்ந்த சின்னாச்சிப்பிள்ளையைத் திருமணம் செய்தார். சின்னாச்சிப்பிள்ளையின் தந்தையார் ஒரு விதானையார். மேற்குறிப்பிட்ட குடும்பத்தாருக்கு மகனாகப் பிறந்தவர்தான் சரவணமுத்துச் சுவாமியார் என்று அழைக்கப்படும் ஆனந்த சடாட்சர குரு அவர்கள். இவர் சிறுவயது தொடங்கியே சாதுக்களின் சகவாசத்தையும் கோயில் வழிபாட்டையும் யாத்திரை செய்தலையும் பெற்றிருந்தார். அடிக்கடி இந்திய யாத்திரை செய்து வந்தார்.

திருவொற்றியூரிலுள்ள இறைவனால் ஆட்கொள்ளப் பட்டார். ஒரு சிவராத்திரி தினத்தன்று திருவொற்றியூரில் இருக்கும்போது ஒரு சாது எதிர்ப்பட்டு 'நீர் ஏன் இருக்கிறீர்' என்று கேட்டார். 'நானும் ஒரு தேவையை நோக்கி இருக்கிறேன்' என்றார். 'இரவு நாலாம் சாமப் பூஜை முடிந்ததும் நான் இவ்விடத்திற்கு வருவேன், என்னை எதிர் பார்த்து இரும்' என்று சொல்லிவிட்டு அந்தச்சாது போய் விட்டார். சரவணமுத்து கோயில் வாசலிலேயே இரவு முழுவதும் இறைவனையும் சாதுவையும் நினைந்தப

டியே நித்திரை விழித்திருந்தார். கண்மூடித் தியானத்தில் இருந்தால் அச் சாதுவே தியானத்தில் தோன்றுவார். அவர் இதற்கு முன்பு செய்த தியானங்கள் எல்லாம் சாதுவின் உருவமாகவே மாறிவிட்டன. தியானத்திலமர்ந்தார். உள்ளும் புறமும் சாதுவே தென்பட்டார். இப்படிப்பட்ட போராட்ட நிலையிலேதான் அன்றிரவு முழுவதும் கழிந்தது.

நாலாம் சாமப் பூஜை முடிந்ததும் சாதுதோன்றினார். இறைவனாரது திருஉருவத்தைப் பார்க்கும் போதும் சாதுவின் திருஉருவே தெரிந்தது. காரணம் அவருக்கு விளங்கவில்லை. சாது காந்தமென அவரைக் கவர்ந்து இழுத்தார். பூஜைமுடிந்த அதே நேரத்தில் சாது சரவணமுத்துவுக்குத் தீட்சை வைத்தார். தீட்சை வைத்து மந்திரோபதேசமும் செய்தார். தீட்சை பெற்றுக் கொண்டதும் சரவணமுத்துவுக்கு அளவிலா ஆனந்தம். பெறற்கரிய பேறு பெற்றதாக எண்ணினார். தமது குருநாதன் யார் என்று அறிய ஆவல் கொண்டார். உனக்கு விருப்பமான பெயரால் அழைப்பாயாக என்று ஒலி மாத்திரம் கேட்டது. சாது அப்பொழுது மறைந்து விட்டார். வாழ்நாளில் எப்பொழுதாவது அந்தச் சாதுவைப் பார்க்கும் வாய்ப்பு கிட்டவேயில்லை. கோயிலுள்ளே சென்றார். இறைவனார் திருவருளை வியந்தார்.

“இரும்புதரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து என்புருக்கி
கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினை உன்கழலிணைகள்” என்றும்

“இணையார் திருவடியென்தலைமீது வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்”

என்றும் நெஞ்சார வாயாரப்பாடி மெய்மறந்து நின்றார். அரும்பேறு பெற்று மாறில்லா மகிழ்ச்சியில் திளைத்தார்.

“மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே”

என்பது தாயுமானார் வாக்கு. யாத்திரையின் பலனால் வார்த்தை சொலச் சற்குரு வாய்த்தார். வந்த நோக்கம் நிறை வேறிவிட்டது. கடலுக்கடியிலுள்ள முத்துச்சிப்பி ஐப்பசிமாசத்து மழைத்துளியை விரும்பிக் கடலுக்குமேலே வந்து வாயைத் திறந்து கொண்டு படுத்திருக்குமாம்.



மழைத்துளி விழுந்ததும் வாயை மூடிக்கொண்டு கடலுக்கு அடியிலே சென்று விடுமாம். அதுபோல உபதேசம் கிடைத்ததும் உடனேயே ஈழநாடு வருவதற்கு எண்ணமிட்டார். அன்று காலையே புறப்பட்டு விட்டார். ஆனால் கையிலே காசு இல்லை. அம்பிகையின் சந்நிதியில் படுத்திருந்து கொண்டு எண்ணமிட்டார். ஒரு பொய்யுறக்கம், அதற்குள்ளே சிறிய கனவு, ‘காசைப்பற்றிக் கவலைப்படாதே. காசு தேவையான போது கிடைக்கும்.’ எழுந்து பார்த்தார். ஒருரூபாய் படுக்கையில் கிடந்தது. அந்த ஒரு ரூபாவையும் எடுத்து முடிந்து கொண்டு ஊர் புறப்பட்டுவிட்டார். முடிந்த பணம் முடிச்சிலேயே இருக்க ஈழநாடு வந்து சேர்ந்துவிட்டார். பாஸ்போட்டும், விசாவும், பெமிற்றும் பெற்று இந்தியாவிலிருந்து இலங்கைக்கும் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கும் பிரயாணம் செய்யும் அன்பர்களுக்கு இச்செய்தி, அதிசயமாகத்தான் தோன்றும்.

ஊர்வந்ததும் நமது வளவுக்குள் ஒரு கோயில் கட்டி சிவகாமசுந்தரி என்ற அம்பாளைப் பிரதிஷ்டை செய்தார். அம்பாளுக்கு நித்திய பூஜை அவரே செய்து தினமும் அக்கினி காரியமும் செய்து வந்தார். இதன்பின் சாதாரண சரவணமுத்துவாக இருந்தவர் சிலரது உள்ளத்தில் சரவணமுத்துச் சாமியாராக மாறியிருந்தார். சிலர் சுவாமிகளைக் குருவாகவே பூஜித்தார்கள். சுவாமிகளுடைய பிரதான சீடர்களாகப் பின்வருவோர் விளங்கிலர். இன்றும் சுவாமிகளுடைய சமாதியில் இருந்து பணியாற்றுபவரும் சுவாமி அம்மா என்று யாவராலும் வழங்கப்படுபவருமான மாணிக்க அம்மா அவர்கள். அடுத்தவர் மாணிக்க அம்மா அவர்களின் தம்பியாராகிய பீதாம்பரம் அவர்கள். மயில்வாகனம் என்ற அன்பர். நீர்வேலி முருகுச் சாமியார். இவர்கள் சரவணமுத்துச் சுவாமிகளிடம் உபதேசம் பெற்று அவரது சீடர்களாயினர். முள்ளியவளையில் உள்ள ஐவர் சுவாமிகளிடம் உபதேசம் பெற்று ஆத்மீக நிலையில் மிக உயர்ந்தவர்களாக விளங்கியிருக்கின்றனர்.

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து அடியார் கூட்டம் கதிர்காமத்திற்கு கரையோரப் பாதையால் நடையாத்திரை செய்வதுண்டு. அடியார் கூட்டத்துடன் சுவாமிகளும் சென்றார்கள். முப்பனைக்காட்டில் சுவாமிகளைத் தனியாக விட்டு யாத்திரைக் கோஷ்டி வெகு தூரம் சென்றுவிட்டது. சுவாமிகள் காட்டில் தனியாகவே இருக்க

நேரிட்டது. சுவாமிகள் பிந்தி விட்டதை எவரும் அறியார். அன்றிரவு மரத்தின் கீழே படுத்திருக்கும் போது முருகப் பெருமான் சோறு கொண்டுவந்து கொடுத்து இளைப்பாற்றிச் சென்றார். விடியச் சுவாமிகள் யாத்திரைக் கோஷ்டியினர் தங்கியிருந்த இடத்திற்குத் தனியாக நடந்து சென்ற போது பெரிதும் ஆச்சரியப்பட்டார்கள்.

கையில் பணம் இருந்தால் அதைச் சோறாக்கி அடியவர்களுக்குக் கொடுத்து விடுவார். பணத்தைப் பற்றிக் கவலைப் படுவதே இல்லை. கையில் கிடைக்கும் பணம் உடனே அன்னதானமாக மாறி விடும். சுடலைக்குச்சென்று வாரக் கணக்கில் தனியாகத் தங்குவார். அங்கு யாருமறியா வண்ணம் கடுந் தபசு செய்வார். முருகனைப் பற்றிய எண்ணம் வந்து விட்டால் ஆனந்தக் கூத்து ஆடுவார். நோயாளர் சென்று அவரது பாதத்தில் வீழ்ந்து தமது நோயை மாற்றுமாறு கேட்பர். உடனே விபூதியை எடுத்து மந்திரித்துவாயிலும்தலையிலும்போட்டுநெற்றியிலும் அணிந்து விடுவார்கள். அவ் விபூதியினால் குணமடைந்தோர் பலராவர்.

சுவாமிகள் சமாதியடைவதற்கு மூன்று தினங்களுக்கு முன்பு மாணிக்க அம்மாவிடம் இந்த உடம்பு இன்னும் மூன்று தினங்களுக்குத்தான் இருக்கும் என்றார்கள். சுவாமிகள் கூறியதை எவரும் நம்பவில்லை. சுவாமிதான் சுகமாக இருக்கிறாரே, ஏதோ சுவாமி வேடிக்கையாகத்தான் சொல்கிறார் என்பது பலருடைய எண்ணம். மாணிக்கஅம்மாவிடம் 'நான் சமாதியடைவதைப்பற்றி நீ ஒன்றுக்கும் பயப்படாதே' உன்னைப்பற்றி எல்லாம் இறைவனிடம் நிறையக் கூறியுள்ளேன் என்றார். இந்த இடத்தில் ஒரு சமாதி கெதியில் வரப்போகிறது. அதன் அதிஷ்டசாலிகள் யாரோ என்று அடிக்கடி கூறுவதுண்டு.

மாணிக்க அம்மா ஒருமுறை ஐந்து ரூபாய் வைத்திருப்பதைச் சுவாமிகள் கண்டுவிட்டார்கள். உடனே அதைக் கொண்டுவரச் செய்து ஐந்து ரூபாய்க்கும் அரிசி காய்கறி வாங்கி அன்னதானம் செய்வித்தார். அன்னதானம் முடிந்தபின் இப் பணத்தை எதற்கு வைத்திருந்தாய் என்று கேட்டார்? கற்பூரம் ஊதுவத்தி வாங்குவதற்காக வைத்திருந்தேன்என்ற மறுமொழி கிடைத்தது. இனிமேல் காசு கையில் கிடைத்தால் உடனே அடியார்களுக்கு அன்னதானம் செய்துவிட வேண்டும் பணத்தைச் சேர்த்து வைக்கக் கூடாது என்று உபதேசம் செய்தார்கள்.



சுவாமிகள் சமாதி அடைவதற்குச் சிறிது நேரத்திற்கு முன் மாணிக்க அம்மாவை அழைத்து தம்முடன் எப்போதும் கொண்டு திரிந்த பிரம்பையும் விபூதிப்பையையும் அம்மாவிடம் கொடுத்து இவை இரண்டும் எந்நாளும் உனக்குத் தேவை இவற்றைப் பேணி வைத்திரு என்று சென்னார்கள். இவையே சுவாமிகள் செய்த கடைசி உபதேசமாகும். 1938 ஆம் ஆண்டு பங்குனி மாம் முதலாந்தேதி சுவாமிகள் தாம் முன்னரே கூறியவாறு சமாதி அடைந்தார்கள். அவர்களது சமாதி பிறந்த ஊராகிய குப்பிழானிலேயே வைக்கப்பட்டது,

## ஆத்ம சுகத்தை அளிக்கும் அருள் மொழிகள்

பிரபஞ்சம் அநித்தியம் என்பது நன்கு அறியுமளவு ஆசை குறைகிறது.

ஆசை குறையுமளவு சுகம் அதிகரிக்கிறது. ஆசை பொன்னாலான கை விலங்கு.

தேகாபிமானம் உள்ளவரை சுக துக்கம் உண்டு· சுக துக்கங்களுக்கு அப்பாற்பட்ட ஆத்ம சொரூபத்தை அடைய முயலுக.

மனிதனுக்குப் பெரும் பகையாயிருப்பது ஆசை. தினமும் நற்கருமங்களையே செய்.

தான் ஆத்ம சொரூபம் என்பதை உணருமளவு பந்தத்திலிருந்து விடுபடுகிறான்.

கவலையற்று வாழ விரும்பினால் பற்றுதலற்று வாழ். சத்தியத்தையே பேசிப் பழகு.

மரணம் என்பது உடல் மாற்றல், அது மற்றொரு வாழ்க்கைக்கு வாயிலாக அமைகிறது.

# ஆத்ம ஞானி பாயஜீத் பிஸ்தாமி

(அல்–ஹாஜ் வி. எம். ஷம்சுத்தீன்)

பெரியார் பாயஜீத் பிஸ்தாமி அவர்கள் பெரிய ஆத்ம ஞானி. இவரைப் பற்றி இளவரசர் தாராசுக்கோ எழுதிய தபினத்துல்–அவுலியா என்ற நூலில் மிகச் சிறப்பாகக் கூறியுள்ளார். ஹஸரத் பிஸ்தாமி அவர்கள் தன் வாழ்நாளை ஆத்மீகத் துறையில், சிரியா நாட்டு காடு பாலைவனம் ஆகிய இடங்களில் கழித்தார். இவர் இறைவன் வணக்கத்துக்காக பள்ளிவாசலுக்குள் நுழையு முன், வெகு நேரம் பள்ளி வாசல் முன் வாசலில் நின்று அழுவார்களாம்! ஏன் அழுகிறீர்கள் என எவரும் கேட்டால், நான் அசுத்தமானவன், பாவி. பரிசுத்தமான பள்ளிக்குள் நுழைந்துவிட்டால் பரிசுத்தமான அப் பள்ளிவாசல் அசுத்தமாய் விடக்கூடாதே எனப்பயந்து அழுகிறேன் என்பாராம். இவர் தொழுது கொண்டிருக்கும் போது இவருடைய இருதயத்திலிருந்து ஒரு சப்தம் வரும். இச் சத்தத்தை இவர் கேட்டுக்கொண்டிருப்பாராம். இச் சத்தம் பக்கத்திலிருப்பவர்களுக்கும் கேட்கும். இதை முஸ்லீம் ஞானிகள் நாத மணி பூசை என்பார்களாம்.

இவர் ஒரு சமயம், பள்ளிவாசலில் தொழுதுவிட்டு, வெளியே வந்த சமயம், இவர்களிடம் அப்பள்ளிவாசல் கத்தீப் ''ஆத்மஞானி அவர்களே! தாங்கள் ஜீவனோ பாயத்துக்காக எத் தொழில் செய்கின்றீர்கள் என்று கேட்டாராம், இக்கேள்வியைக் கேட்டதும் ஞானி பிஸ்தாமி அவர்கள் திரும்பவும் பள்ளிவாசலில் நுழைந்து மீண்டும் தொழுதார்களாம். இதைக் கண்ணுற்ற சிலர், : ஸூபி அவர்களே! தாங்கள் ஏன் மீண்டும் தொழுதீர்கள்?'' எனக் கேட்டபோது ''மக்களுக்கு இறைவன் உணவளிக்கின்ருர் என்பதைக்கூட அறியாத பள்ளிவாசல் லெப்பையின் பின் நின்று நான் தொழுதது கூடாது என்ருர்களாம்.

பாரசீக நாட்டு, சிறந்த ஆத்ம ஞானிகளான ஜாமியும் பரீதுத்தீன் அத்தார் அவர்களும், இவருடைய ஆத்ம ஞானத்தைக்குறித்துப் புகழ்ந்து எழுதியுள்ளார்கள். இவர் புஸ்தாமி என்ற ஊரில் பிறந்ததால் இவருக்கு பிஸ்தாமி எனப் பெயர் வந்தது எனக் கூறுவர்.

முஸ்லிம்களுக்குள் இவரைப்போன்று எத்தனையோ சீரிய ஞானிகள் துறவிகள், தோன்றி முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதார்களுக்கும் ஞான ஒளி கொடுத்துள்ளார்கள். இஸ்லாம் துறவறத்தை அநுமதிக்காமல் போனுலும் எவரும் துறவு பூணக்கூடாதெனத் தடைசெய்யவில்லை. அப்படித் தடை செய்யுமாயின், முஸ்லிம் உலகில் ஒரு துறவியும் இருத்தல் முடியாது. பால்யத் துறவியான குணங்குடிவள்ளல் துறவி மாத்திரமல்ல, தமிழிலும், அரபியிலும் தேர்ச்சி பெற்றவர், குர் ஆனையும் நாயக வாக்கியத்தையும் நன்கு கற்ற மாமேதை. இஸ்லாம் துறவறத்தை தடை செய்து இருக்குமாயின் குணங்குடி வள்ளல் துறவியாக இருக்கமுடியுமா? என்பதை முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டும்.



# விந்தை என்ன........?

— சி. பொன்னுத்தம்பி —

பாடும் பருவம் இதுவன்றே
பரமா உந்தன் கழல் பற்றி,
ஆடும் எளியேன் சிறுமனத்தை
அலையா துள்ளே நிறுத்திவிடு!
மூடும் கரிய திரை கிழித்து,
முதல்வா, ஞான விளக்கேற்றி,
பாடப்பணிப் பாய்!அதை உனது,
பரமானந்தம் என உணர்வேன்!

காலைப் பொழுதில் புள்ளினங்கள்
கானம் இசைத்து உனைப்பாடும்!
கோலக் குயில்கள் உன்புகழைக்
கூவிக் கூவி மகிழ்ந்தாடும்!
நீலக் கடலின் அலைத்திரளும்
நெஞ்சம் கனிந்து உனைப்பாடும்!
சிலக்கவிதை எனக்கு மட்டும்
தெரியாதிருக்கும் விந்தையென்ன...?

எளியேன் வரண்ட உயிர்க் குழலில்
இறைவா, ஞான இசை ஏற்றி,
மழைபோல் இனிய பாட்டமு தம்
வாரி வாரிப் பெய்திடுக!
வளமார் கவிதைப் பொன்மலர்கள்
மலர்ந்தென் உளத்தில் மணம் வீசிப்
பொலியவேண்டும்! அதுவே உன்
புனித இன்பம் என உணர்வேன்!

ஜெய குருதேவ்!

# சிவானந்தத் துயர்!

அருந்தவப்பா ரதமணித்தாய் கண்கலங்க
    அருட்பெரியோர் புலம்பிச் சோர,
விரிந்தோங்கு வான்நடுவே ஒளிர்கின்ற
    வியன்கதிரோன் திடுதிப் பென்று
மறைந்துவிடும் மாயம்போல், ஞானவொளி
    மண்ணுலகிற் பரப்பி நின்ற
பெருங்கதிராம் சிவானந்தப் பேரிமய
    ஜோதிநமைப் பிரிந்த தையோ!

பாரதத்தாய் தவளமணிப் பணிமுடியிற்
    பதித்தஎழில் வைரம் போன்று,
பாரகத்தே அருட்கதிர்கள் பாய்ச்சியிருள்
    பறித்தவனே, பரமன் பாதம்
சேரவென இன்னுயிரை மறைத்தெங்கோ
    சென்றதனால், உலகில் துன்பப்
பேரிருளைச் செறித்தானே! கண்ணொளியைப்
    பிரிந்தோமே! தவிக்கின் றோமே!

ஒப்பரிய ஞாலம்காத் துய்விக்கும்
    மாரியும்சிற் சிலபோ தார்த்துச்
செப்பரிய பெரும்புயலாற் சீறுதல்போல்,
    சிவானந்தத் தேன் சொரிந்த
ஒப்பில்லாக் கருணைவள்ளல், திடுமெனப்பே
    ருடல்விடுத்தெம் உயிர் துடிக்க
வைப்பானென் றெண்ணிலமே! இன்றெமது
    துயர்துடைக்க வல்லார் யாரே?

— மரு. பரமகுரு.



# அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்!

(T. L. வஸ்வாணி)

அவர் குன்றுகளை அணுகியதும் விருட்சங்களுக்குக்கீழே அமர்ந்தார். சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தது. அஸ்தமிக்கும் சூரியனின் மங்கலான அந்தி ஒளியில் யாம் அவரைக் கேட்டதாவது;— "ஆசிரியரே! பிரார்த்திக்க எமக்குக் கற்பிக்குக.

அப்போது ஆசிரியர் சொன்னது;—

எவர்கள் அவருக்குப் பழமோ, மலரோ அல்லது இலையோ கொண்டு வருவதில்லையோ அவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள்; ஏனெனின் எவர்கள் வெறுங் கைகளுடன் வருகிறார்களோ அவர்கள் நிரப்பப்படுவார்கள்!

எவர்கள் தங்கள் பாடல்களைக் குழந்தைகளுக்குப் பாடுகிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; ஏனெனின் அவர்கள் வாழ்வின் அழகிலும் அதிசயத்திலும் வளர்வார்கள்!

எவர்கள் தங்கள் ஆசையை அழிக்கிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; ஏனெனின் அவர்கள் அமைதியில் வசிப்பவர்கள்!

எவர்கள் திறந்த வெளி வீடுகளில் வசிக்கிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; ஏனெனின் அவர்கள் தங்கள் தளைகளைத் தகர்த்துக் கொண்டார்கள்; ஆன்மாவின் காற்று அவர்கள் மேல் வீசி அவர்களின் பாடலையும் பேச்சையும் தொலைவிலுள்ள ஒதுக்கிடங்களுக்குக் கொண்டு செல்கின்றது!

எவர்கள் இருதயத்தில் ஒரு குரலொலியுடனும் கண்களில் ஒரு காட்சியுடனும் உலகில் வீடின்றி அலைந்து திரிகிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; ஏனெனில் அவர்கள் சுவதேசத்தைச் சேமத்துடன் அடைவார்கள்!

எவர்கள் அபாயமான கடலில் தேடிக் கொண்டு பயணம் செய்கிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; ஏனெனின் அவர்கள் விரும்பியதை அடைவார்கள்.

எவர்கள் மிகச்செங்குத்தான மலைமேல் அடிமேல் அடி வைத்து நடக்கிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஏனெனின் அவர்கள் மெய்க் காட்சி மலையை அடைவார்கள்!

எவர்கள் இறைவனை நாடிப்பசியும்தாகமும் கொள்கிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள்; ஏனெனின் அவர்கள் அவரது அடிமைகளினதும் அடியார்களினதும் விருந்துகளில் பங்குகொள்வார்கள்!

எவர்கள் அவரின்பொருட்டு உடைஉரியப்பட்டுநிர்வாணமாகிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்: ஏனெனின் அவர்கள் ஞானவொளி உடைகளால் உடுத்தப்படுவார்கள்!

எவர்கள் பாடிக்கொண்டு தங்கள் வழியிற் செல்கிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள்; ஏனெனின் தேடுதற் பாடல் முக்கால முழுமையின் ஊதிய வருவாயில் என்றும் உளதாகிறது!

எவர்கள் ஏளனம்செய்வோனுக்கும் எடுத்ததற்கெல்லாம் குறை கூறுபவனுக்கும் செவிடான வர்களாயிருக்கிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்: ஏனெனின் அவர்கள் தங்கள் செவிகளைப் புல்லாங்குழலின் பாட்டுக்குத் திறந்துள்ளார்கள்!

எவர்கள் உலகின் பகட்டுக்கும் வலிமைக்கும் குருடானவர்களா யிருக்கிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்;ஏனெனின் அவர்கள் ஒருபுதுச்சுவர்க்கத்திலும் ஒருபுதுப் பூவுலகிலும் காட்சியைப் பெறுவார்கள்!

எவர்கள் அன்புப்பாதையில் நடக்கிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; ஏனெனின் அவர்கள் சிங்கங்களையும் செம்மறியாட்டுக் குட்டிகளையும் செம்மறியாடுகளையும் ஓநாய்களையும் அமைதியில் ஒருமித்து இருக்கக்காண்பார்கள்!



எவர்கள் அமைதியாயிருக்கக் கற்றுக் கொள்கிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; ஏனெனின் அவர்கள் பரமான்மாவின் பாடலைக் கேட்பார்கள்!

எவர்கள் இருதய பூரிப்பால் கொடுக்கிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்;ஏனெனின் அவர்கள்அகண்ட அன்பைப் பெறுவார்கள்!

எவர்கள் இப்பூவுலகப் பொருட்களைத் தங்களுக்கே கொடுக்க மறுக்கிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; ஏனெனின் அவர்கள் நித்திய வாழ்வில் தங்களையே நிறைவு செய்வார்கள்!

எவர்கள் வாழ்வில் விட்டுக்கொடுக்கிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; ஏனெனின் அவர்கள் ஆன்மாவை ஓர்ந்தறிதலில் வளர்வார்கள்!

எவர்கள் தாழ்ந்தவர்களுடன் அழுகிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; ஏனெனின் அவர்கள் தங்கள் உதடுகளில் புன்சிரிப்புடன் மறுமையில் விழிப்பார்கள்!

எவர்கள் மனநிலையில் அமைதிவாய்ந்தவர்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; ஏனெனின் அவர்கள் நித்திய ஆன்மாவின் உருக்காட்டிகளாக இருப்பார்கள்!

எவர்கள் தர்மத்திற்காக – நித்தியசெம்மைக்காக— துன்பப்படுத்தப்படுகிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; ஏனெனின் அவர்கள் கடவுளின் இராச்சியத்தை அகத்தே காண்பார்கள்!

எவர்கள் எதிர்த்து நில்லாது துன்பப்படுகிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; ஏனெனின் அவர்கள் இறகுகள் வளர்த்து பரம்பொருளிடம் பறந்து செல்வார்கள்!

எவர்கள் கண்ணோட்டமுடையவர்களோ அவர்கள்ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; ஏனெனின் அவர்கள் மனித இனத்துடன் ஒன்றுயிருப்பார்கள்!

எவர்கள் இருதயங்கள் காமத்திலிருந்தும் பொன்னாசையிலிருந்தும் தூய்மைப்படுத்தப் பட்டிருக்கின்றனவோ

# உன்னையே அறிந்து பந்தமற்றிருக்குக!

[சுவாமி சிவானந்தர்]

''மக்கள் பின்பற்றி நடப்பதற்கு தங்களை விட யாரேனும் சான்றோரைப் பெற்றிரா விட்டால் அவர்கள் அபூர்வமாகவே சீரடைகிருர்கள்'' என்று ஒலிவர் கோல்ட் சிமித் (Oliver Goldsmith) சொன்னுர். ''எவன் காதுகளைப் பெற்றிருக்கிருனே அவன் கேட்பானுக; எவன் கண்களைப் பெற்றிருக்கிருனே அவன் காண்பானுக'' என்று இயேசுக் கிறிஸ்து சொன்னுர்.

கடந்த யுகங்களாக உண்மை, வானுலக அழகும் அழிவின்மையும், வாழ்வின் நிலையான பெறுமதிகள், ஆன்மிக ஒளிர்வின் இரகசியங்கள் முதலியவற்றின் வழிகாட்டி மனிதஇனத்தின் ஆசிரியர்களும், சீவிப்பதற்கு மதிப்பான அனைத்தினதும் காப்பாளருமாகிய ஆற்றலும் புகழும் வாய்ந்த ஆன்மாக்களின் பரம்பரையாகக் கைமாறி வந்திருக்கின்றன.

பதினுயிரக்கணக்கான குறிப்புக்காட்டும் பொருட்களும் அனுபவமும் பதித்து வைக்கப்பட்ட, மிக விரிவாகப் பரந்திருக்கும் வாழ்வுப் பள்ளியில் ஒப்புயர் வற்ற மாபெரும் ஆசிரியராம் இயற்கை தானே தொந்தரை செய்யும், பிரச்சினைகள் புரியாதமறை செய்திகள், முரண்பாடுகள் அனைத்தின் விளக்கத்திற்கும் வழி வகைகள் தருகிறது.

முன்பக்கத் தொடர்ச்சி

அவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள்; ஏனெனின் அவர்கள் பந்த மற்றிருப்பார்கள்!

எவர்கள் இறைவன்பொருட்டுத் துன்பப்படுகிருர்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; ஏனெனின் அவர்களின் துன்பம் மகிழ்ச்சியாய் மாற்றப்படும்!

எவர்கள் அமைதிக்காக முயற்சிக்கிருர்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; ஏனெனின் அவர்கள் துயர நிகழ்ச்சியும் கண்ணீருமாகிய இவ்வுலகில் போர் எல்லைக்கப்பால் வசிப்பவர்கள்!



''எவன் கண்கள் வைத்திருக்கிருனே அவன் பார்ப்பானுக''. இச்செய்தி என்றும் உண்டு. கேட்போரும் உளர். ஆனுல் எவர்கள் தங்கள் கண்களையும் காதுகளையும் வேண்டுமென்று மூடிக் கொள்கிருர்களோ அவர்கள் தாங்களே விளைவித்த அஞ்ஞானஇருளில் தூங்குவார்கள்; ஏனெனின் யாதும் விழிப்பூட்டல் விழிப்பதற்குப் பரி மாற்றமான விருப்பமுள்ள தன்மை இருந்தாலன்றி உண்மையாகப் பயன் விளையத்தக்க தாயிராது.

ஆகையால் நேர்மையும் தீவிர முயற்சியும், விசுவாசமும் விருப்பமும் ஒவ்வொரு சாதகனும் வைத்திருக்க வேண்டிய முதல் முக்கிய தேவைகள். பின்னர் உண்மையானதை உண்மையற்றதிலிருந்தும், விரும்பத் தக்கதை விரும்பத்தகாததிலிருந்தும் பிரித்தறிதற்குப் பகுத்தறிவுள்ள விவேக ஆற்றல் வைத்திருக்க வேண்டும். அதன் பிறகு ஒளிவு மறைவற்ற சிரத்தையும் உறுதித் தன்மையுமுடன் தான் தேர்ந்தெடுத்ததைக் கைப்பற்றிக் கொள்வதற்கும், தளராத விடா முயற்சியுடன் தன் இலட்சியத்தைப் பின் தொடர்ந்து செல்வதற்கும் ஒரு தீவிர தீர்மானம் பெற்றிருக்க வேண்டும்.

பரிமாற்றத்தின் உலகியற் கருத்தில் ஒப்புமை சார்ந்த ஓர்ந்தறிவில் ஆதாரங்கொண்ட குரு சீட உறவு நீடித்திருக்க மாட்டாது.

எவ்வளவு திறமாக ஒருவர் தன் ஆசிரியரைச் சேவிக்க முடியும்? அவரை மிக அதிகமாக மகிழ்விக்கும் மிகச் சிறந்த வழியில் தெளிவானதும் ஓர வஞ்சக மில்லாததுமானவிளக்கத்தால் தூண்டப்பெற்ற எதிர்ப்பில்லாத பணிவு மூலம். அவரது கோட்பாட்டின் ஒரு மிகத் தெளிவான சான்ருனவனுக இருப்பதே ஒருவர் ஆசிரியருக்கு உதவக்கூடிய மிகப் பயன்றரும் சேவை.

உண்மை நாடுவோர்களே! தயவு கூர்ந்து மறுபடியும் உங்களை மனித இனத்தின் ஆசிரியர்களின் சேவைக்கு, அவர்கள் வாழ்ந்த இலட்சியங்களுக்கு, அவர்களால் அளிக்கப்பட்ட போதனைகளுக்கு அர்ப்பணம் செய்யுங்கள். அமைதியும் நல்லெண்ணமும், எல்லாப் பிராணிகளிடமும் தன்னலமற்ற அன்பு, துன்புறுவோருக்கும் துணையற்ருேருக்கும் உற்சாகமான சேவை, உங்கள் இயல்பின் பண்பு நயமும்

பரிசுத்தமும் நேரானதும் விரும்பத்தக்கதுமான அனைத்தினதும் அபிவிருத்தி, பண்படாததும் கரடு முரடானதும் இழிந்ததும் தூய்மையற்றதுமாகிய அனைத்தினதும் துடைத்தழித்தல் முதலியவற்றைப் பற்றிய அவர்களின் செய்தியை உற்றுக் கேளுங்கள்.

அடைவை மறவாதீர்கள். உண்மையே மெய்யானது, பொய்மை, ஒரு கை விடுதல், சித்தியே மெய்யானது, தோல்வி ஒரு தூண்டும் விசை; அறமே மெய்யானது, மறம் அதன் விளக்கக் கூற்று; அன்பே மெய்யானது, வெறுப்பு ஒரு தப்பு வழி காட்டப்பட்ட மன முடுக்கு; மகிழ்ச்சியே மெய்யானது, துக்கம் ஒரு தன் மயக்கம்; வாழ்வே மெய்யானது, மரணம் என்றும் சிறந்ததை நோக்கி வாழ்வு மாறும் தோற்றம். இவற்றை மறவாதீர்கள்.

தியானித்து அமைதியும் அக ஒளிர்வினதும் உதயத்திற்கு இட்டுச் செல்க. அகமுக ஆராய்ச்சி செய்து உலகியல் ஆசையாகிய மாசை நீக்குக. சிந்தித்து மெய்மையைப் பொய்மையிலிருந்து பிரிக்குக. பகட்டான தோற்றமும் ஆரவாரமும், வஞ்சகமின்மையும் வஞ்சகமும், ஆர்வமும் வெறுப்பும், புகழ்மொழியும் அவதூறுமாகிய இந்நிலவுலகுக்குரிய அடுக்கணிக் காட்சிக்கிடையே வாழ்வின் பெருக்குக்கும் வற்றுக்கு மூடாக உள் இருதய தனிமையில் உன் சிறப்பான ஆன்மிக இயல்பின் மூலக் கோயிலில் அருளும் அமைதியும், அழகும் மகிழ்ச்சியும் காண்க. ஒரு சாட்சியாயிருக்குக. உன்னையே அறிந்து பந்தமற்றிருக்குக.

## ஆத்ம இரகசியம்

[பிருஹதாரண்ய உபநிடதம்]

நீ காட்சியைக் காண்பவனைக் காண முடியாது. நீ கேள்வியைக் கேட்பவனைக் கேட்க முடியாது. நீ நினைவை நினைப்பவனை நினைக்க முடியாது. நீ அறிவை அறிபவனை அறிய முடியாது. எது அனைத்தினுள்ளும் உறைகிறதோ அதுவே உன் ஆத்மா. அதனின்று வேறானதெல்லாம் உண்மையானதன்று. [111-4-2]



## இறைவனின் அற்புத இரகசியம்

(சுவாமி சிவானந்தர்)

செருக்கும் வீம்புமுள்ள ஒரு செல்வந்தனைப் பார்க்க அர்ஜுனனும் கிருஷ்ணரும் போனார்கள்.

அவன் அவர்களை வரவேற்று அவர்களுக்கு உணவோ அல்லது ஏதேனும் அன்புக் கையுறை அளிப்பதற்கோ அக்கறை கொள்ளவில்லை.

அவன் அற முடிவாக உதாசீனமா யிருந்தான்.

''ஐந்து கோடி ரூபா அவன் பெறுவானாக'' என்று கிருஷ்ண பிரபு அவனை ஆசீர்வதித்தார்.

பின் அவர்கள் ஓர் ஏழ்மையான ஆனால் பக்தியுள்ள வயோதிபனிடம் சென்றார்கள்.

அவன் ஒரு பசு வைத்திருந்தான்.

அவன் அர்ஜுனனையும் கிருஷ்ண பிரபுவையும் வணங்கி அவர்களுக்குப் பால் அனைத்தையும் அளித்தான்.

''அவனது பசு இறக்கக் கடவது'' என்றார் கிருஷ்ண பிரபு.

அர்ஜுனன் மிக வியப்படைந்து 'ஓ பிரபுவே, நான் உம் இயல்பை விளங்க முடியவில்லை. உம்மை அவமதித்த செல்வந்தனை ஆசீர்வதித்து உம்மைச் சேவித்த எளிய மனிதனைச் சபித்தீர்கள்'' என்றான்.

கிருஷ்ண பிரபு பதிலளித்தார்.

செல்வந்தன் செல்வ மூலம் அதிக செருக்கும் வீம்புங் கொண்டு நேராக நரகத்திற்குப் போவான்.

எளிய மனிதன் தன் பசுவிலுள்ள பற்றை நீக்கி விரைவில் என் இருப்பிடத்திற்கு வருவான்.

அர்ஜுனன் சொன்னான். ''என் பிரபுவே உங்கள் வழிவகைகள் பரம இரகசியமானவை. உங்கள் இயல்பை நான் இப்போது அறிகிறேன்''.

# 'பிராணப் பயிற்சி'

[யோகி ஸ்ரீ எஸ். ஏ. பி. சிவலிங்கம்]
(டோக்கியோ, ஜப்பான்)

நமதுடல் எண் சாண் அளவுடையது. உடலினுள் எண்ணற்ற நுண்ணறிவிற் கண்டறியலாகாப் பல அரும்பெரும் இயந்திரங்களைக் கொண்ட இச்சரீரம் பிராணசக்தியின்றி ஓர் நிமிட நேரமும் தங்கவியலாது. பிராண சக்தி நமதுடலுக்கு நீண்ட காலம் உயிருடனிருக்கவும், உடலாரோக்கியம், ஆனந்தம் அனைத்தையும் அநுபவித்து சகல வித ரோகங்களையும் நீக்கிப் புஷ்டியுடனும், வந்த வியாதியையும், வரப்போகும் வியாதியையும் நீக்க வல்லது பிராண சக்தி.

யார் பிராணாயாமம் தினசரி செய்து வருகின்றனரோ, அவர்கள் ஆத்மதியானமும், அறிவும், இன்சொல்லும் பிரகாசித்து ஓங்கி நிற்பர். பிராண அடக்கப் பயிற்சிகளுள் எண்ணற்ற வகைகளுள. அவைகள் யாவும் நமது உடலுக்குத் தவிர்க்கவியலாத எண்ணற்ற நன்மையாகவும், ஆத்மீகத்திற்குத் திறவு கோலாகவும் இருந்து வருகின்றது. இப்பிராணாயாமப் பயிற்சியால் பிராணன் நமதுடலினுட் சென்று காந்த சக்தியைப்போன்று நரம்புகளை முறுக்கேற்றி, அதி வலுவையும், தீய இரத்தத்தை சுத்த இரத்தமாக மாற்றுவதால், இதன் காரணமாய் உடல், மனம், மூளை வலுப்பெற்று அதிக ஆரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையுமடைகின்றோம்.

இப்பிராணாயாமப் பயிற்சிகளை என் நேரத்தில், எச்சமயம் செய்வது? அதாவது காலையிலும், மாலையிலும் நம் கிரியைகளனைத்தும் முடிந்த பின்பு, வயிறு காலியாக விருக்கும் சமயம் இப்பயிற்சிகளைச் செய்யவும். ஆரம்பத்தில் முதன் முதற் பிராணனைத் தொழுது பின்பு செய்யவும்.

நாம் நாடிகளையும், அதன்இருக்கையையுமாராய்வோம். உடலினுள் முக்கிய நாடிகள் பதினைந்து. ஆனால் மொத்த நாடிகள் 72,000 உள்ளன. அவைகள் யாவும் நமதுடலில் பற்பல பாகங்கட்கும் சென்று பீர்க்கர்ஸ் கூடு போன்று, பற்பல விதங்களில் நமக்கு உபயோகமாக இருக்கின்றது. இப்பதினைந்து நாடிகளும் எங்கெங்கு நமதுடலில் வியாபித்திருக்கின்றன என்பதையாராய்வோம்.



**பதினைந்து நாடிகளின் பெயர்களாவன.-**

சுழிமுனை, பிங்கலை; இடைகலை, சரஸ்வதி, பூடை, வருணை, அத்தி, கிங்குவை, அச்சுவினி, அலம்புடை, குகு, விசுவோதரை, பயச்சுவினி, சங்கினி, காந்தாரை என்பனவாம்.

சுழிமுனை நாடியானது உடலின் பின்பக்கம் முதுகின் நடுவின் வீணாதண்டம் போன்ற முதுகெலும்புடன் கூடிய தலைப் பாகத்தின் நடுவிலிருந்து புருவ மத்தி வரையிலிருக்கும்.

சுழிமுனை நாடியின் இடது பக்கத்தில் இடைகலையும், வலது பக்கத்தில் பிங்கலை நாடியுமிருக்கும்.

அதன் பின்னும், முன்னும் சரஸ்வதி, குகு ஆகிய இரண்டு நாடிகளுமிருக்கும்.

இடைகலையின் பின்னும், முன்னும் காந்தாரை என்னும் நாடியும், அத்தி என்னும் நாடியும் கிங்குவை என்னும் நாடியைப் பொருந்தியிருக்கும்.

பிங்கலை நாடியின் பின்னும், முன்னும் பூடை என்னும் நாடியும், அச்சுவினி எனும் நாடியும் பொருந்தியிருக்கும்.

இடைகலைக்குப் பின்னும், முன்னும் குகுவும், அத்தியும் விசுவோதனு என்னும் நாடியுமுள்ளது.

அச்சுவினி, குகு என்னும் நாடிகளின் மத்தியில் வருணையும், பூடையும், சரஸ்வதியும் பொருந்தியிருக்கும்.

காந்தானு, சரஸ்வதி என்னும் நாடிகளின் மத்தியில் சங்கினி நாடியானது நிலைத்து நிற்கும்.

கந்தத்தானத்தின் மத்தியில் அலம்புடை நாடியானது நிலைத்து நிற்கும்.

சுழிமுனை நாடியின் முன்னே குகு என்னும் நாடியானது குய்யத்தானத்தின் அளவாய்ச் சென்று கொண்டிருக்கும்.

வருணை நாடிகீழ், மேலாக உடம்பு முழுவதும் பரவிச் சென்று கொண்டிருக்கும்.

பிங்கலை நாடியும், இடைகலை நாடியும் வலதிடமாய் ஆக்கிராணத்தின் அளவாகச் சென்று கொண்டிருக்கும்.

அச்சுவினி நாடியானது வலது கால் பெருவிரல் அளவாக வியாபித்திருக்கும்.

பூடை, பிங்கலை நாடிகளின் பின்னால் இடது கண்ணின் அளவாகச் சென்று கொண்டிருக்கும்.

அச்சுவினி வலது செவியின் அளவாகவும், சரஸ்வதி பிரமம் நாடியின் பின்பக்கம் நா அளவாகவும், அத்தி, கிங்குவை எனும் நாடிகளின் இடது கால் அங்குஷ்டத்தின் அளவாகவும் வியாபித்திருக்கும்.

சங்கினி இடது காதின் அளவாகவும், காந்தானு இடது கண் அளவாகவும். விசுவோதரை முகத்தின் நடுவிலும், அலம்புடை அபானன் அளவாகவும் வியாபித்திருக்கும்.

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் நாகன், கூர்மன், இருகரன், தேவதத்தன், தனஞ்சயன் ஆகிய இந்த பத்து வாயுக்களும் எல்லா நாடிகளினூடேயும் சென்று இயங்கிக் கொண்டிருக்கும்.

ஓரளவு யாம் நாடியின் தன்மையையும், அதன் இருத்தலையுமறிந்தோம்.

உடற்கூறு சாஸ்திரமும், யோக நூலும் பிராணனைப் பற்றியும், நரம்புகளைப் பற்றியும் விரித்து உரைக்கின்றன.

நமது உடலில் பிராண சக்தி எவ்வாறு இயங்குவதென் பதை யாம் கண்டறிய வேண்டும். ஆரம்பத்தில் யாம் இரு மூக்கின் வழியாய் இயற்கையாய் சுவாசத்தை உள்ளிழுத்தும் வெளிவிட்டும் சுவாசித்துக் கொண்டிருக்கிறோம். இது மானிடரொவ்வொருவரின் இயற்கடமை. இவ்வாறிருக்க இச் சுவாசத்தையே நாம் மெதுவாகவும், சீராகவும் வேகமின்றி உள்ளிழுத்தும், வெளிவிட்டும் வருவோமேயாயின் இரைப்பை நிரம்பும் வண்ணம், பின் பூரானவையும் வேகமின்றி வெளிவிட்டுச் செய்வதால் உடற் பலம், ஆரோக்கியம், ஊக்கம், உற்சாகம் அனைத்தையும் கைமேற் கண்ட பலனைப்போன்று பெறுவோம். இவற்றை எவ்வாறு யாம் பெறுகின்றோமெனின் யாம் சுவாசத்தை மெதுவாகவும், தீர்க்கமாகவும் சுவாசிக்குங்கால் இச் சுவாசமானது நமதுடலினுட் சென்று, அழுக்கையும், தீய இரத்தத்தையும் போக்கி நுரையீரலையும் நரம்பையும் தூய்மைப் படுத்தி ஆரோக்கியத்தையும், நற்பசியையுமதிகரிக்கச் செய்கின்றது.



சுமார் பல தடவைகள் இயன்றவாறு அதிகம் சுவாசத்தை மெதுவாகவும், உள்ளிழுத்தும், வெளிவிட்டும் செய்வதால் உயர்ந்த பலனையும், நரம்பு திடத்தையும் பெற்றுய்வோம்.

சமதள விரிப்பின்மேல் வெகு இலகுவான முறையில் உடல் நிமிர்ந்து முகம், கழுத்து இப்பாகங்கள் யாவும் விறைப்புடன் நிமிர்ந்துட்காரவும். பின்பு இடது கையை முழங்காலின்மேல் விறைப்பாய் அமர்த்தியிருக்கவும்.

பின் வலது கையை சின் முத்திரையிற் பிடித்து வலது கைப் பெருவிரலால் வலது மூக்குத் துவாரத்தையடைத்து, இடது மூக்குத் துவாரத்தால் வெகு வேகமாய் இயன்றளவு சுவாசத்தை உள்ளிழுக்கவும். உள்ளிழுக்கப்பட்ட சுவாசத்தை உடன் வலது இரு விரல்களால் இடது மூக்குத்துவாரத்தையடைத்து மூக்கின் வலது துவாரத்தின் வழியாய் வேகமாய் சுவாசத்தை வெளிவிடவும். பின்பு அதன் வழியே சுவாசத்தையுள்ளிழுத்து மூக்கின் அடுத்த துவாரத்தின் வழியாய் வெளிவிடவும். இவ்வாறாக இயன்றளவு சுவாசத்தை வேகமாய் மாற்றி மாற்றிச் செய்யவும்.

இப்பயிற்சியால் மூக்கடைப்பு, தொண்டை சம்பந்த வியாதிகள், இதயவலி, மார்புவலி முதலிய அநேக விதமான வியாதிகள் நீங்கும். உடலும், உள்ளமும் வலுப்பெற்று இரத்த சுத்தியாகும்.

அடுத்த பயிற்சியும் முன்மாதிரியே சமதளத்தினுட்கார்ந்து இரண்டு கைகளையும் சின் முத்திரையில் இரண்டு முழங்கால்களின் மேல் வைத்து வெகு வேகமாயும், தீர்க்கமாயும் தேவைக்குத் தக்கவாறு சுவாசத்தை உள்ளிழுத்தும் வெளிவிட்டும் செய்யவும். உடல் ஆடாமல் நிமிர்ந்தமுறையிற் செய்யவும்.

சிறிய பயிற்சி பெரும் பலனைத் தரவல்லது. இப் பயிற்சியும் வயிற்றுப்புசம், அஜீரணம், தலைவலி இதயவலி முதலிய வியாதியைப் போக்கி இரத்த சுத்தியைத் தருகின்றது.

அடுத்த பல பயிற்சிகளை அடுத்த இதழில் காண்க.

# பேரின்பமும் சிற்றின்பமும்

[மாத்தளை — அருணேசர்]

உலகத்தில் சிற்றின்பம், பேரின்பம் என இரண்டு விதங்களில் இன்பம் என்பது பேசப்படுகிறது. பெரும்பான்மையோர் சிற்றின்பத்தை நாடி அதில் தங்கள் வாழ்நாளைக் கழிக்கின்றனர். சிறு தொகையினரே பேரின்பத்தை நாடி உழைப்பவர். சிற்றின்பத்தை நாடுபவர் பேரின்பம் இன்னதெனக் காணாதவராவர். ஆனால் பேரின்பத்தை நாடுபவரோ சிற்றின்பத்தின் தன்மையைக் கண்டவராவர்.

இவ்வாறு இருக்கையிலே, பேரின்பத்தை நாடுபவரைச் சிற்றின்பத்தை விரும்புபவர்கள் பழிக்கிறார்கள். இப்படிப் பழிப்பது தகாத செயலாகும். தான் கண்ட வேம்பின் கனியைச் சுவைக்கும் பெருமிதத்தில் மூழ்கிய ஒருவன், தான் சுவைத்தறியாத பலாப்பழத்தைச் சுவைக்கும் ஒருவனைப் பழிப்பது போல்வதாம் இது. கூழ் முதலிய அற்ப உணவை உண்டு வருபவன் பாலன்னம் முதலிய உணவு கிடைத்தபோது அவ்வற்ப உணவை விரும்புவானா? அல்லது அதனைப் பெரிதெனப் போற்றுவானா? அல்லது பாலன்னம் முதலிய உணவு உண்பவரைப் பழிப்பானா? — விரும்பமாட்டான்; பெரிதெனப் போற்ற மாட்டான்; பழிக்கவும் மாட்டான் அல்லவா?

இது போலவே, உலக வாழ்வை மெய்யெனக் கருதிச் சிற்றின்பம் அநுபவிப்பவன் பேரின்பம் கிடைத்த போது சிற்றின்பத்தை விரும்பமாட்டான்.

விரும்பிய பொருள் கிடைத்தபோது மனம் ஒருமுகப்படுவதால் உண்டாவது சிற்றின்பம். மனம் ஒருமுகப்பட்ட காலத்தில் நிஜவடிவ ஆனந்தம் விளங்கும். இந்த நிஜவடிவ ஆனந்தநிலை ஒரு நொடிப்பொழுதே நிலைத்திருப்பதாம். இப்படிச் சிறிதுகால இன்ப நிலையை உடையதால் தான் சிற்றின்பம் எனக் கூறப்படுகிறது.



பேரின்பம் அப்படியல்ல. சதா ஆனந்த நிலையுடன் விளங்குவது. அதாவது' — சிறிது போழ்து மட்டும் மனம் ஒருமுகப்பட்ட நிலையில் மனத்தை நிறுத்தி நிஜவடிவ ஆனந்தத்தை நீடித்து அளிப்பது. இதனை,

**''தினைத்தனை யுள்ளதோர் பூவினிற் றேனுண்ணாதே**
**நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறு மெப்போதும்**
**அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியும்**
**குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பி''**

என்ற மணிவாசகரின் திருவாக்கு நன்கு விளக்குவது காண்க.

**''சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே**
**மற்றின்பம் வேண்டுபவர்''**

என்றார் திருவள்ளுவரும். ''பிறர்பால் வௌவிய பொருளால் தாமெய்தும் நிலையில்லாத இன்பத்தை விரும்பி, அவர் மாட்டு அறனல்லாத செயல்களைச் செய்யார், அறத்தினால் வரும் நிலையுடைய இன்பத்தை நாடுபவர்'' என்பது இதன் பொருள். இதில், நாயனார் சிற்றின்பத்தை நிலையில்லாத இன்பம் என்கிறார்; பேரின்பத்தை நிலையுடைய இன்பம் என்கிறார். மற்றும் அறனல்லாத செயல்களைச் செய்பவர் சிற்றின்பம் நாடியவர் என்றும், அறத்தின் வழியானதாய செயல்களைச் செய்பவர் பேரின்பத்தை நாடியவர் என்றும் விளக்குகின்றார். ஆதலினாலேதான் ஞானம் கைவந்தவர் சிற்றின்பத்தை நாடி உழலுபவர் கூட்டத்தை விலகியவராய்த் தனிவழியில் நின்று தாயினும் இனிய தயாபரனாகிய இறைவனைப் போற்றுகின்றனர் போலும்.

---

### ஆத்ம இரகசியம்

எவர் எல்லாப் பிராணிகளிடமும் இருக்கிறாரோ, ஆயினும் பிராணிகள் அனைத்தையும் விட வேறானவரோ, எவரை எல்லாப் பிராணிகளும் அறிகிறதில்லையோ, எல்லாப் பிராணிகளும் எவருடைய உடலாயிருக்கின்றனவோ, எவர் உள் நின்று எல்லாப் பிராணிகளையும் ஆள்கிறாரோ, அவரே உன் ஆத்மா, அந்தர்யாமி, அழிவற்றவர். [111-7-15

## பகவான் ஸ்ரீ இராமக்கிருஷ்ணருடைய துறவறச் சீடர்

# மகா புருஷ் சுவாமி சிவானந்தர்

[மா. மகாதேவா, சரஸ்வதி வித்தியாலயம், புசல்லாவ]

வங்காளத்தில் பறசாற் (Barasat) என்னும் இடத்தில் இராம் கானை கோஷால் (Ram Kanai Ghoshal) என்ற பெரியார் ஒருவர் இருந்தார் அவர் அந்தணர் குலத்திலுதித்தவர். உத்தமனுக்குரிய பல நற் குணங்கள் அவரிடத்திலிருந்தன. பேரறிஞர் என்று பலர் அவரைக் கூறுவார்கள். நீதி மன்றத்தில் அவர் ஒரு சிறந்த நியாயவாதியாக இருந்து வந்தார். ஏராளமாகச் சம்பாதித்த செல்வத்தை அவர் துறவிகட்கும் வறிய மாணவர்கட்கும் தாராளமாகச் செலவிட்டு வந்தார். எதிர்காலத்தைப் பற்றிய எண்ணம் சிறிதேனும் அவருக்கில்லை. பிற்காலத்தில் அரசாங்க உத்தியோகத்தரான பொழுது தனது அறச் செயல்கள் சிலவற்றை மனச் சான்றிற்கு எதிராகக் குறைத்தார். ஈற்றில் இராம் கானை கொசச் பிகாரில் உப திவானாகக் கடமையாற்றினார் (Deputy Dewara of Behar). பொருட் செல்வம்பெருகிய போதும் அருட் செல்வத்தைப் புறக்கணிக்கவில்லை. பல சாதனைகளைப் பயின்று சிவத்தை சக்தியென வழிபடு முறையில் தேர்ந்து சிறந்த சக்த தாந்திரிக் சாஸ்திர அறிஞராக விளங்கினார்.

இராம் கானை கோசாலுக்கு வாம சந்தரி தேவி என்ற அம்மையார் வாழ்க்கைத் துணைவியாக அமைந்தார். கற்பு, அடக்கம், அமைதி, நிறை காப்பு முதலிய பெண்மைகள் வாம சுந்தரி அம்மையாருக்கு அணிகலமாயிருந்தன. இறைவனிடம் இவர் மாறாத பக்தி பூண்டு ஒழுகி வந்தார். புதல்வர் ஒருவரை ஈன்றெடுத்து அன்புடன் ஆதரித்து வரும் பொழுது, அப்புதல்வர் மரணமடைந்தார். ஆறாத் துயரத்தில் கல்கத்தாவிற்கு அருகாமையிலுள்ள தறக்கேஸ்வர் (Tarakeswar) என்னும் இடத்திலுள்ள புகழ்பெற்ற சிவ ஆலயத்திற்குச் சென்று விரதம் கொண்டு மாறாத பக்தியுடன் வழிபட்டு வந்தார். சில காலம் சென்ற பின்பு இவ்வம்மையாருக்கு ஆண் மகவு ஒன்று பிறந்தது. அக்குழந்தை எதிர் காலத்தில் உலகம் முழுதுக்குமே பரமாசாரியராக வரப் போகிறது என்பதை எவரும் அறிந்திலர். குழந்தை தறக் கேஸ்வர் சிவன் அருளால் பிறந்தது என நினைத்து, சிவபெருமானின் திருநாமங்களில் ஒன்றாகிய தறக் நாதர் என்ற பெயரை வைத்தனர் பெற்றோர்.



தவப் புதல்வனைப், பெற்றோர் தம் கண் இமை போல் கண் காணித்தனர். உண்மை, பெருமை அஞ்சாமை ஆகிய குணங்கள் தறக்நாதரிடம் இளமையில் இருந்தன. விவேகம் இருந்த பொழுதும் ஏட்டுக் கல்வியில் ஆர்வம் காட்டவில்லை. ஆத்ம சாதனையில் ஆசை காட்டினார். பல சமயங்களில் தியானத்திலேயே இருப்பார். விளையாட்டோ அல்லது களியாட்டமோ அவரைக் கவர்ந்தனவல்ல. அகத்துள்ளே ஏதோ தன்னைத் தூண்டுவது போல் தனிமையை நாடிப் பிரார்த்தனையிலும், தியானத்திலுமிருப்பார். நண்பர்கள் இவர் குணத்தையறிந்து மதித்தனர். அவரைக் காண்போர் யாவரும் வியப்படைந்தனர். பரசாற் பாடசாலை தலைமையாசிரியர் கூறியது பின்வருமாறு:-

"தறக் நாதருடைய நற்குணங்களும், தூய்மையும் எங்கள் உள்ளத்தைக் கவர்ந்தன."

தறக் நாதர் வாலிபப் பருவமடைந்த போது கடவுளையறியும் ஆசை வளர்ச்சியடைந்தது. உயர்தரப் படிப்பிற்குக் கல்கத்தா வந்து சேர்ந்து பிரம்மோ சமாஜ் (*Brahme Samai*) என்ற சபையைச் சேர்ந்தார். ஆனால் கடவுளைக் கண்ட குரு ஒருவர் வேண்டுமென்ற ஆசை தறக் நாதருடைய மனதை விடவில்லை.

தந்தையாரின் வருமானக் குறைவைக் கண்டு உத்தியோகம் தேடி டில்லிக்குச் சென்றார். தறக் நாதர் அங்கே பிறசண்ண என்னும் நண்பருடன் சமயசாதனைகளைப்பற்றிச் சம்பாஷிக்கும்பொழுது சமாதி என்ன என்பதை அறிய ஆவல் கொண்டார். தக்ஷிணேசுவர ஆலயத்தில் வசிக்கும் பரமஹம்ச தேவர் ஒருவரே சமாதி நிலையை அடைந்துள்ளார் என்று நண்பர் கூறினார். தறக் நாதர் அவரைக் காணவேண்டுமென ஆசைப் பட்டார்.

சில நாட்களின் பின் தறக் நாதருக்குக்கல்கத்தாவிலுள்ள வர்த்தகக் கம்பெனியில் ஓர் உத்தியோகம் கிடைத்தது. கல்கத்தாவில் ஸ்ரீ இராமக்கிருஷ்ணருடைய இல்லறச் சீடர் இராமசந்திரதத்தரின் உறவினர் ஒருவரை நட்புக் கொண்டார். இராமச்சந்திர தத்தரின் இல்லத்தில் ஸ்ரீ இராமக் கிருஷ்ணரைக் கண்டார். "நான் முதல் முறை ஸ்ரீ இராம கிருஷ்ணர் சமாதியடைவதைக் கண்டேன். சுயநிலையடைந்ததும் ஸ்ரீ இராமகிருஷ்ணர் சமாதியின் தன்மையைப் பற்றி விரிவாக விளக்கினார். இம் மகான் ஒருவர் தான் கடவுளை அடைந்துள்ளார் என்று என் உள்ளத்தில் உணர்ந்தேன்" என்று பிற்காலத்தில் தறக் நாதர் கூறுவார்.

தக்ஷிணேசுவர ஆலயத்தைப் பற்றித் தறக் நாதர் அறிந்திலர். ஆயினும் நண்பர் ஒருவருடன் ஒரு சனிக்கிழமை தக்ஷிணேசுவர ஆலயத்திற்குச் சென்றார். சென்றதும் பகவான் ஸ்ரீ இராம கிருஷ்ணர் தங்கும்

இடத்தைத் தேடினார். ஈற்றில் பகவான் தன் ஆசனத்திலிருப்பதைக் கண்டார். பராசக்தித் தாய் குரு வடிவமாக இருப்பதை உணர்ந்தார்.

சிறிது நேரம் சென்றபின் பகவான் "நீர் உருவமுள்ள கடவுளை நம்புகிறீரா? அல்லது அருபமுள்ள கடவுளை நம்புகிறீரா? என வினவ "நான் அருபமுள்ள கடவுளை நம்புகிறேன்" என விடையளித்தார் தறக் நாதர்." அன்னை பராசக்தி பல வடிவம் எடுப்பாள் என்பதை நீ மறுக்க முடியாது என்று சொல்லிப் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் எழுந்து தறக் நாதரைப் பின் தொடரச் சொல்லிக் காளி கோவிலுக்கு சென்றதும் அன்னைக்கு அஷ்டாங்க நமஸ்காரஞ் செய்தார். "நான் எதற்காகக் குறுகியஎண்ணங்களை வைத்திருக்க வேண்டும். இறைவன் எங்கும் நிறைந்தவன். அவன் எங்கும் உள்ளான் என்றால் இந்தச் சிலையிலும் நிச்சயமாக உள்ளான்" என்ற எண்ணம் தறக் நாதருடைய மனத்தில் தோன்றியதும், உடனே அஷ்டாங்க நமஸ்காரம் செய்தார்.

பகவான் ஸ்ரீ இராம கிருஷ்ணர் தறக் நாதருடைய தெய்வீக சக்திகளையறிந்து "இன்று இரவு இங்கே தங்கும். இடைக்கிடை வருவதில் நிலையான பயன் அடைய முடியாது. அடிக்கடி இங்கே வரவேண்டும்," என்று கூறினார். அன்றிரவைத் தனது நண்பருடன் கழிப்பதாகக் கூறியபடியால் பகவானிடம் மன்னிப்புப் பெற்றுக் கொண்டார். தான் கூறியது போல் அடுத்த முறையும் வந்தார்.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் தனது வழக்கத்தில் ஒரு குடும்பத்தையும் பற்றி விசாரிப்பதில்லை. ஆனால் தறக் நாதரின் குடும்பத்தினரைப் பற்றி மட்டும் விசாரித்தார். தறக் நாதருடைய தகப்பனார் இராம்கானை கோஷால் தக்ஷிணேசுவர ஆலயத்தில் பகவான் ஸ்ரீ இராமக் கிருஷ்ணரைப் பல முறை சந்தித்தார். ஒரு முறை ஸ்ரீஇராமக்கிருஷ்ணரின் உடல் முழுவதும் எரியத் தொடங்கியது. இராம் கானை கோஷால் அதற்கு அச்சரம் ஒன்றை அணியக் கொடுத்தார். அணிந்ததும் நோய் உடலை விட்டு விலகியது. தறக் நாதர் இராம் கானையின் மகனென அறிந்ததும் பகவான் ஸ்ரீ இராம கிருஷ்ணர் மிக மகிழ்ச்சியடைந்தார். இராம் கானை ஒருமுறை தக்ஷிணேசுவரத்திற்குவந்தபொழுது பகவான்ஸ்ரீஇராமகிருஷ்ணர் தனது பாதங்களினால் இராம் கானையின் தலையைத் தொட்டார். தொட்டவுடன் இராம் கானை பரவச நிலையடைந்தார்.

மூன்றும் அல்லது நான்காம் முறை தறக் நாதர் பகவான் ஸ்ரீஇராம கிருஷ்ணரிடம் வந்ததும் தறக் நாதரைத் தனியிடம் அழைத்து அவரின் நாவில் ஏதோ எழுதி மந்திர உபதேசம் செய்தார் பகவான். தறக்நாதர் மெய் மறந்து முதல் முறை சமாதி நிலையை அனுபவித்தார். நல்லவர் உறவினால் நல்லெண்ணம் பிறக்கும். பகவானின் உறவினால் தறக் நாதருடைய உள்ளத்திற் தெய்வீக அனுபவங்கள் பெருகின. அந்நாட்களில்



அவருடைய மனநிலை பின் வருமாறு; "நான் குருதேவரைக்காணும் போதெல்லாம் அழுகை வரும். ஓர் இரவு காளி ஆலயத்திற்கு முன்னிலையில் நின்று நெடு நேரம் அழுதேன். என்னை அருகில் காணவில்லையென்று குருநாதர் தேடி வந்தார். என்னைக்கண்டதும் "கடவுளை நினைத்து அழுவோர் கடவுளின் உதவி பெறுவார். அவ்வாறு விடும் கண்ணீர் முற்பிறப்பின் பாவங்களை அழிக்கின்றன" என்றார். ஒருநாள் நான் பஞ்ச வடியில் தியானத்திலிருந்தேன். குருநாதர் அவ்விடத்தில் வந்து என்னைப் பார்த்தபடியே அசைவற்று நின்றார். நான் அவரைக் கண்டதும் தாரை தாரையாகக் கண்ணீர் விட்டேன். ஏதோ என் உடல் முழுவதும் ஊர்வதை உணர்ந்து அசைந்தேன். நான் இந்நிலையடைந்ததைக் கண்ட குரு தேவர் மிகமகிழ்ச்சி கொண்டு, "இது தெய்வீக உணர்ச்சியால் வந்த பயன் என்று அழைத்துக் கொண்டு போய் ஏதோ உணவு கொடுத்தார்."

நாட்கள் சில கழிய தறக் நாதர் வைத்த நம்பிக்கையும் அன்பும் பெருகின. குருதேவர் ஒருவரே சிறந்த வழிகாட்டி என்று எண்ணினார் தறக் நாதர். தான் இளமையில் நினைத்தவை எல்லாம் பகவானிடமுண்டு என்பதையறிந்தார். இதனால், உலக ஆசைகள் மறைந்தன. புறமுள்ளவற்றை அவதானியார். தன் உடை முதலியவற்றைக் கவனிக்க மாட்டார். அகத்தே தியானிப்பார். தன்னடக்கத்தைப் பெருக்குவதற்காகவும் தெய்வீக சாதனைக்கு இடையூறாக உள்ளவற்றைப் போக்குவதற்காகவும் கண்களை அரைவாசி மூடிக் கொண்டே நடப்பார். தாயொருத்தி தன் சேயிடம் வைத்திருக்கும் அன்பை விடச் ஸ்ரீ இராம கிருஷ்ணரின் அன்பு பன்மடங்கு பெரியது.

பிற்காலத்தில் ஒரு பக்தனுக்கு எழுதும் பொழுது "இராமக் கிருஷ்ணர் கடவுளா? அல்லது பெரியாரா? என்பதைப் பற்றி நான் இன்னும் சரியான முடிவிற்கு வரவில்லை. ஆனால் அவர் முற்றும் துறந்த ஞானி. அன்பின் அவதாரம்; காலஞ் செல்லச் செல்ல நான் அவரின் தெய்வீக வாழ்வையறிய, அவரைக் கடவுளுக்கு மேலானவரென்றே உணர்கின்றேன். அவர் பட்ச பாதமின்றி எல்லோரிடத்திலும் அன்பு பாராட்டித் துன்ப நிலையை நீக்கி, மனிதன் சாந்தி அடையத் துன்பத்தைக் காண வேண்டுமென விரும்புகிறார். உலக மக்களின் நன்மையைக் கருதுகின்ற அவர் போன்ற மகானை இவ்வுலகம் காணவில்லை.

தறக் நாதர் வறுமையின் காரணத்தாற்றனது சகோதரிக்காக மாற்றுக் கல்யாணம் செய்தார். ஆனால் தான் லௌகீக கருமங்களில் ஈடுபடுவதில்லையென உறுதிகொண்டார். இதையறிந்த பகவான் "நீ ஏன் அச்சமடைகின்றாய்? நான் உதவி புரிவேன். உனது மனைவி இருக்கும் வரையும் அவருடைய தேவைகளைக் கவனிக்க வேண்டும். பொறுமையுடன் இரு; அன்னை (காளி) எல்லாவற்றையும் சரியாக்குவாள்". குரு தேவரின்

கட்டளைப் படியே ஒழுகினார் தறக் நாதர். தறக் நாதருடைய பாரியார் விரைவில் இறைவனடி சேர்ந்தார். இல்லறத்தில் இருந்த பொழுதும் தறக் நாதருடைய மனத்தில் சிற்றின்ப ஆசைகள் சிறிதேனுமில்லை.

மனைவி இருந்த போதும் தூய பிரமச்சரிய விரதத்தைக் கடைப் பிடித்தார். "உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான் வரன் என்னும் வைப்புக்கோர் வித்து" என்னும் பொய்யா மொழிக்கு அணிகலமானார் தறக் நாதர். இதையறிந்து சுவாமி விவேகானந்தர் தறக் நாதரை "மகா புருஷரென" அழைத்தார். அன்று தொடக்கம் எல்லோரும் தறக் நாதரை "மகாபுருஷ் மகாராஜ்" என்றே அழைப் பார்கள். தவம் ஒழுக்கம் உடையவர்க்கே பொருந்தும். "தவமும் தவமுடையார்க்கே ஆகும்" என்றார் வள்ளுவர். வாழும் உலகம் இத் தன்மையானது; எது நிலையுள்ளது; எது நிலையற்றது என்பதை யறிந்த தறக்நாதர் துறவறமே வாழ்க்கைக்கு வேண்டிய பெருமை யைத் தரும் என்று நம்பினார். ஆகையால் துறத்தலை விட உயிருக்கு மேலானதில்லையென எண்ணித் தறக்நாதர் சந்நியாசியாக விரும்பித் தன்னுள்ளிருக்கும் எண்ணத்தைத் தந்தையாருக்குத் தெரிவித்தார். தந்தையார் ஆனந்தக் கண்ணீர் விட்டு மகனைத் தாங்கள் வழிபடும் குடும்பத் தெய்வத்தை வணங்கச் சொன்னார். தறக்நாதர் அட்டாங்க நமஸ்காரம் செய்ய, தந்தையார் மகனை ஆசீர்வதித்து, "நீ கடவுளை அடைவாயாக! நானும் கடவுளை அடையச் சிரமப் பட்டேன். துறவ றத்தை நாடினேன். ஆனால் அது கைகூடவில்லை. நீ கடவுளை அடை வாயெனப் பிரார்த்திக்கிறேன்" என்று ஆசீர்வதித்தார். மகிழ்ச்சி யடைந்த தறக்நாதர் தக்ஷிணேஸ்வர ஆலயத்திலிருந்த ஸ்ரீ இராம கிருஷ்ணரிடம் நிகழ்ந்தவற்றைக் கூறப் பகவான் மகிழ்ச்சியுடன் அனு மதித்தார். பகவானின் வேண்டுகோளுக் கிணங்கிச் சில காலம் இரா மச் சந்திர தத்தரின் இல்லத்திற் தங்கினார், தறக்நாதர். ஆனால் தக்ஷிணேசுவரத்திற்கு அடிக்கடி வந்து தனது குருதேவரைச் சந்திப் பார். 1885 ஆம் ஆண்டில் ஸ்ரீ இராமக்கிருஷ்ணரைச் சிகிச்சையின் பொருட்டு முதல் கல்கத்தாவிற்கும் பின்பு காசிப்பூருக்கும் அழைத்து வந்து விட்டார்கள் சீடர்கள். அவருக்குப் பணிவிடை செய்வதற்கா கத் தறக்நாதரும் மற்றச் சீடர்களும் முன்வந்தனர்.

காசிப்பூரில் சில மாதங்கள் கழிந்தன. இவர்கள் வசித்த காசிப் பூர் சிறந்ததோர் தபோவனமாக மாறிவிட்டது. அரிய தத்துவங்க ளைப் பற்றிச் சிலர் ஆராய்ச்சி செய்தனர்; சிலர் ஆழ்ந்த தவத்திலி ருப்பார்; பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டு பரவச மடைவர் சிலர்; இறைவனின் நாமத்தை உச்சரித்துக் கொண்டு ஆனந்தக் கூத் தாடி அருள் விருந்தாடினர் வேறு சிலர். இப்படிப் பட்டவருள் தறக் நாதரும் வேறு சில இளைஞர்களும் பிரபஞ்ச வாழ்க்கையின் பற்றை ஒழித்தவர்கள்.



காசிப்பூர் தோட்டத்திற் பெரிய மகான்களுடைய வாழ்க்கை வரலாற்றைப் பற்றி ஆராய்ச்சி நடந்தது. பகவான் புத்தரின் வர லாறு, தறக் நாதரையும், சுவாமி விவேகானந்தரையும், சுவாமி அபே தானந்தரையும் முற்றும் கவர்ந்தன.

ஒருநாள் மூவரும் யாருக்கும் சொல்லாது புத்த காயாவை நோக் கிப் புறப்பட்டனர். காயாவில் வெள்ளரச மரத்தின்கீழ் ஆழ்ந்த நிஷ்டையில் அமர்ந்தனர். ஆழ்ந்த தெய்வீக உணர்ச்சியால் நரேந் திரநாதர் (சுவாமி விவேகானந்தர்) கண்ணீர் விட்டு அருகில் நிஷ் டையில் இருந்த தறக்நாதரைக் கட்டித் தழுவினார். பகவான் புத் தர் தறக்நாதருடைய உடலில் நுழையத் தனது அகக் கண்ணால் கண் டாரென சுவாமி விவேகானந்தர் சொல்வதை, சுவாமி அபேதானந் தர் கேட்டார். சிலநாட்கள் காயாவில் தங்கியிருந்து வேண்டியவாறு நிஷ்டை புரிந்தபின் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

ஆவணிமாதம் 1886 ஆம் ஆண்டில் ஸ்ரீ இராமக்கிருஷ்ணர் மகாசமாதி யடைந்த பிறகு அவருடைய இளஞ் சீடர்கள் மண்ணுலக வாழ்வை வெறுத்தனர். மண்ணுலக வாழ்வு கனவுபோல் கடிதில் கடந்து போய்விடுமென்று அவ்விளைஞர்கள் உணர்ந்தனர். குருதேவரின் பெரு வாழ்வைப் பின்பற்றித் தாங்களும் அவ்வாறு புனிதமாயிருக்க வேண் டுமென்றெண்ணித் தீர்மானித்தார்கள். கல்கத்தாவிற்கு அருகாமை யில் வராஹநகர் என்னும் அமைதியான இடத்திற் குடியிருக்கப் பழங் கட்டிட மொன்று கிடைத்தது. இதுவே அவர்களின் தபோ வனமானது. தறக்நாதரும் இத் தபோவனத்திற் சேர்ந்தார். சகோ தர சீடர்களுடன் கடுந் தபசில் ஆழ்ந்தார். சிலகாலம் கழிந்தது. இவர்கள் எல்லோரும் முறைப்படி சந்நியாசிகளானார்கள். தறக்நா தர் சுவாமி சிவானந்தர் என்னும் பெயர் பெற்றார். ஆனால் இவரை எல்லோரும் மகா புருஷ் மகா ராஜ் என்றும் மகா புருஷ் சிவானந் தர் என்றும் அழைத்தனர்.

வராஹநகர் மடத்திலிருந்து தேச சஞ்சாரஞ் செய்ய வெளியில் புறப்பட்டார். அவர் சென்ற இடங்களுள் குறிப்பிடத்தக்கவை காசி, காயா, பிருந்தாவனம், அலகாபாத், கேதார்நாத், பத்திரிநாத், அல் மோரு ஆகியவைகள். அல்மோருவில் (E. T. Sturdy) E. T. ஸ்ரேர்டி என்ற ஆங்கில அறிஞரைச் சந்தித்தார். மகாபுருஷ் சிவானந்தரிடமே சுவாமி விவேகானந்தரைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரை இங்கி லாந்தில் தருமப் பிரச்சாரம் செய்ய வரவழைத்து ஏற்ற ஒழுங்குக ளையுஞ் செய்தார்.

சுவாமி விவேகானந்தர் 1897ஆம் ஆண்டில் மேல்நாட்டிலிருந்து திரும்பியதும், மகா புருஷ் சிவானந்தர் மதுரைக்குச் சென்று வரவேற்றார். பின்பு சுவாமி விவேகானந்தரின் வேண்டுகோளுக்கிணங்கி இலங்கையில் வேதாந்தப் பிரச்சாரம் செய்ய வந்தார். இலங்கையிற் ஸ்ரீமத் பகவத்கீதை, இராஜயோகம் ஆகிய வகுப்புக்கள் நடத்தினர். மகா புருஷரின் மேன்மைகளை முன்னிட்டுப் பல இந்துக்களும் மேல்நாட்டறிஞரும் அவரைச் சூழ்ந்து கொண்டே இருப்பார்கள். திருமதி பிக்கற்றுக்கு (Mrs. Pickett) ஹரிப்ரியா என்ற நாமத்தை வழங்கினார். மகா புருஷரின் கட்டளைப்படி ஹரிப்பிரியா அவுஸ்திரேலியாவிலும், நியூசிலாந்திலும் வேதாந்தப் பிரச்சாரம் செய்து புகழ் பெற்றனர். கொழும்பு விவேகானந்த சபையை அமைத்தபின் மகா புருஷ் சிவானந்தர் தலைமை மடாலயத்திற்குத் திரும்பினார். இமாலயத்திற்குச் சென்று மீண்டும் ஆழ்ந்த நிஷ்டையில் அமர்ந்தார். இமயத்தில் ஒரு மடாலயம் அமைக்கும்படி சுவாமி விவேகானந்தர் வேண்டிக் கொண்டார். சுவாமி விவேகானந்தர் வாழ்நாளில் இதையமைக்க முடியவில்லையாயினும் மகா புருஷர் 1915ஆம் ஆண்டில் ஒரு மடாலயத்திற்கு அத்திவாரம் இட்டார். இம் மடாலயம் சுவாமி துரியானந்தரின் உதவியால் பூர்த்தியாயிற்று.

1900ஆம் ஆண்டில் சுவாமி விகோனந்தருடன் இமாலயத்திலுள்ள மாயாவதி என்ற புனித இடத்திற்கு மகா புருஷர் சென்றார். திரும்பி வரும் பொழுது சுவாமி விவேகானந்தர் மகாபுருஷரை 'பிலிவிற்' என்னும் இடத்திற் தங்கி வேலூர் மடாலயத்திற்குப் பணம் திரட்டச் சொன்னார். மகாபுருஷர் அவ்வாறே தங்கிப் பணந் திரட்டினார்.

சுவாமி விவேகானந்தர் மகா சமாதியடையு முன் விங்க நாட்டு மகாராஜா ரூ. 500 வேதாந்தப் பிரச்சாரத்திற்காகக் கொடுத்தார். சுவாமிகள் அப்பணத்தை மகா புருஷரிடம் கொடுத்துக் காசியில் ஒரு மடாலயம் அமைக்கும்படி சொன்னார். அவ்வாறே 1902ஆம் ஆண்டில் மகாபுருஷர் காசியில் ஒரு மடாலயம் அமைத்தார். இங்கே பல இடையூறுகள் நேர்ந்த போதும் மகாபுருஷர் மனந் தளர்ச்சியடையவில்லை. மடத்திலுள்ளோர் உணவைப் பற்றிக் கவலைப்படவில்லை. கிடைத்த உணவைப் புசித்து விட்டுத் தியானத்திலேயே காலத்தைக் கழித்து வந்தார்கள். இவ்வளவு இன்னல்கள் இருந்த போதும் மகா புருஷர் வறிய மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பித்தார்.

இந்நாட்களில்தான் சுவாமி விவேகானந்தருடைய சிக்காகோ பிரசங்கங்களை இந்தி மொழியில் மொழி பெயர்த்தார். சிறிது காலத்திற்குப் பின் வேலூர் மடத்திற்குத் திரும்பினார். 1910ஆம் ஆண்டில் மகாபுருஷர் காஷ்மீரிலுள்ள அமர்நாத் மலைக்குச் சுவாமி பிரேமானந்தர், சுவாமி துரியானந்தர் ஆகியோருடன் சென்றார். திரும்பி வந்ததும் மகா புருஷர் வேலூர் மடாலயத்தின் உப தலைவராகத் தெரியப்பட்டார். சுவாமி பிரேமானந்தர் மகா சமாதியடைந்ததும் வேலூர் மடாலயத்தின் முகாமை மகா புருஷரின் பொறுப்பாயிற்று. 1922ஆம் ஆண்டில் சுவாமி பிரமானந்தர் மகாசமாதி யடைந்ததும் மகா புருஷர் ஸ்ரீ இராமக்கிருஷ்ண மடாலயத்திற்குத் தலைவரானார். மடாலயத்தின் தலைவராக முன் கீழ் வங்காளத்திற் பலருக்கு மந்திர உபதேசம் செய்தார்.



1924ஆம் ஆண்டுக்கும் 1927ஆம் இடையே ஆண்டுக்கும் இருமுறை தென்னிந்திய தேச சஞ்சாரம் செய்தார். இத் தேச சஞ்சாரம் செய்யும்பொழுது பம்பாய், நாகப்பூர், ஊட்டி ஆகிய இடங்களில் ஸ்ரீ இராமகிருஷ்ண மடங்களைத் திறந்து வைத்தார். பலர் மகாபுருஷரை அணுகி மந்திர தீட்சை அளிக்கும்படி வேண்டினார்கள். அவர்களின் விருப்பத்திற் கிணங்கித் தீட்சை கொடுத்தார். நீலகிரிமலை கடல் மட்டத்திலிருந்து 6000 அடி உயரத்திலிருக்கின்றது. அவ்விடத்தின் இயற்கை யழகும் சுவாத்தியமும் நிஷ்டையில் இருப்பதற்கு உசிதமாக இருந்தன. இங்கே ஒரு மடாலயம் அமைக்க விரும்பினார் மகா புருஷர். அங்கே நிலம் வாங்கும்படி சில பக்தர்களை வேண்டினார். பெரியோர் எதை நினைத்தாலும் அவை நடைபெறுகின்றன. மடாலயம் அமைப்பதற்கு இரண்டு ஏக்கர் நிலத்தை ஒரு பக்தர் வழங்கினார். அந்தப் பக்தருக்கு அவரது இஷ்டதேவதை கனவில் தோன்றி ''விரைவில் மடாலயம் அமைப்பதற்கு நிலம் தேடி உன்னிடம் ஒருவர் வருவார். கட்டாயமாகக் கொடுக்க வேண்டும் என்று மூன்று நாட்களாக அவருக்குத் தெய்வம் ஞாபகமூட்டியது. அதனாலேயே அவர் நிலம் வழங்கி உதவினார். அந்த நிலத்தில் மடாலயம் அமைக்கப் பட்டது. அங்கே மகா புருஷர் அற்புத ஞான நிலையை அனுபவித்தார். ''நீலகிரி மலையை நான் பார்த்த வண்ணம் இருந்தேன். அவ்வாறு இருக்கும் பொழுது என் உடலிலிருந்து ஒரு பிரகாசமான ஒளி வெளியே செல்வதைக் கண்டேன். ஒளி பெருகி உலகம் முழுவதையும் மறைப்பதையும் கண்டேன். ஊட்டியில் தங்கும் பொழுது பலர் மகா புருஷரைக் காண வந்தனர். உயர்ந்தோர், தாழ்ந்தோர், செல்வர், வறியவர், இந்துக்கள், இஸ்லாமியர் எல்லோரும் திரண்டு வந்தனர். பம்பாய் மகாணத்தைச் சேர்ந்த இஸ்லாமியப் பெண்ணொருத்தி மகா புருஷரைக் கண்டு தன்னை அவர் கைகளால் ஆசீர்வதிக்கும்படி வேண்டினாள். ஊட்டியை விட்டுப் பிரியும் போது அப்பெண் கண்ணீர் விட்டாள்.

1930 ஆம் ஆண்டு தொடக்கம் இம் மகா புருஷரின் உடல் நலம் குறையத் தொடங்கியது. ஆனால் அவரது தெய்வீக சாதனைகள் சற்றும் குறையவில்லை. அரசியலை வெறுத்தார். ஆனால் காந்தி, நேரு,

போன்றவர்களின் தியாகத்தை மெச்சினுர். மனமென்னும் மலரிலேயுள்ள ஈசனையுணர்ந்து எவ்வேலையிலும் ஈடுபடலாமென்று எல்லோரையும் வற்புறுத்துவார்.

மகா புருஷர் இராமகிருஷ்ண மடாலயத்திற்குத் தலைவராயிருக்கும் பொழுது மந்திர தீட்சை வேண்டுவோர் எல்லோருக்குங் கொடுப்பார். மந்திர தீட்சை கொடுப்பதோடு நில்லாமல் சீடர்களின் ஆத்மீக வளர்ச்சிப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுவார். இவரது காலத்தில் இராம கிருஷ்ண மடாலயங்கள் பல இந்தியாவில் மட்டுமின்றி, மேல் நாட்டிலும் பல இடங்களில் உருவாயின. இவ்வாறு தொண்டு புரிந்து 1934 ஆம் ஆண்டு மாசி மாதம் மகா சமாதியடைந்தார். ஜீவ காருண்யத்தில் புத்தர் போன்றும், உயர் ஞானத்திற் சங்கரர் போன்றும், பக்தியில் நாரதர் போன்றும், அன்பில் ஏகநாதர் போன்றும் அவதரித்தவராவர்.

''பகவத் பக்திகொண்ட பக்தர்களுக்காகவே பகவான் உலகத்திலவதாரம் செய்கின்றுர். அவதார புருஷரோடு வருபவர்கள் நித்திய முக்தர்களாவது, கடைசி ஜென்மம் எடுத்தவர்களாவது இருப்பார்கள்.''

ஸ்ரீ இராமகிருஷ்ண உபதேசம்.


வெளிவந்து விட்டது!

ஆத்மஜோதி மலர்

விலை 2.50 – (தபால் செலவு தனி)
இம் மலரின் மூவர்ண அட்டையை யோகர் சுவாமிகளின் திவ்ய உருவம் அலங்கரிக்கிறது.
மலரினுள் ஆத்மீகக் கருவூலங்கள் ஞான மணம் பரப்புகின்றன.
கிடைக்குமிடம் – ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி.




# அப்பரின் அருள் வரலாறு

(வித்துவாட்டி வசந்தா வைத்தியநாதன்)

– சென்ற இதழ்த் தொடர்ச்சி –

**விடம் உண்ணச் செய்தல்**

பின்னர் அவர்கள் ஒன்று கூடி, ''நம்மிடம் கற்ற மந்திரத்தினுலேயே நீற்றறையிலிருந்து உய்ந்தான். இனிக் கொடிய விடத்தை அவனுக்கு ஊட்ட வேண்டும்'' என்று துணிந்தனர். அரசனும் அதற்கு உட்பட்டான். உடனே அக் கொடியோர் விடம் கலந்த பாற்சோற்றை உண்ணும் படி செய்தனர். நாவுக்கரசரும் நஞ்சுண்ட நம்பனை நினைந்து ''எம்பெருமானது அடியார்களுக்கு நஞ்சும் அமுதே ஆகும்'' எனக் கூறி உண்டார். நஞ்சு தீமை விளைக்கவில்லை.

''பொடியார்க்குந் திருமேனிப் புனிதர்க்குப் புவனங்கண்
முடிவர்க்குந் துயர்நீங்க முன்னைவிடம் அமுதானுல்
படியார்க்கும் அறிவரிய பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சமுதம் ஆவதுதான் அற்புதமோ?''

**மதயானையை ஏவுதல்:–**

கொடிய நஞ்சும் பயனற்றுப் போனதைக் கண்டு மதயானையை ஏவிக்கொல்ல முடிவு செய்தனர். அவ்வாறே அரசனது இசைவைப் பெற்று யானையை அவிழ்த்து விட்டனர். குன்றனைய களிறும் கட்டுத்தறியை அறுத்துக் கொண்டோடியது. பாகர்களைப் பரலோகத்திற்கு அனுப்பியது. கட்டிடங்களை இடித்துத் தகர்த்தது. ஊழித்தீ போன்று வெருண்டு ஓடியது. அதன் எதிரே திருநாவுக்கரசர் நிறுத்தப்பட்டார். வெகுண்ட வேழம் தன்னை நோக்கி ஓடி வருவதை வாகீசர் உணர்ந்தார். சிறிதும் அஞ்சாது ''சுண்ண வெண் சந்தனச் சாந்து'' என எடுத்துப் பாடி அடிதோறும் கெடிலப் புனலுமுடையாரொருவர் தமர்நாம் அஞ்சுவதியாதொன்றுமில்லை, அஞ்ச வருவது மில்லை எனக் கூறினுர்.

அதுபோது மதங்கொண்ட யானையும் அவரடி பணிந்தது. தம்மை ஏவிவிட்ட சமணர்களையும் குத்துக்கோற்

காரர்களையும் மிதித்தும் கிழித்தும் கொன்றது. இடுக்கண் விளைக்க நினைத்தவர்களுக்கே இடுக்கண் விளைந்தது.

**கல்லுடன் கட்டிக் கடலிற் பாய்ச்சுதல்**

யானையிடமிருந்து தப்பிய சமணர்கள் ஒன்று கூடிக் காவலனின் தாள் பணிந்து, திருநாவுக்கரசர் மீளாதவாறு கல்லுடன் கடலில் தள்ள வேண்டும் என்று விண்ணப்பிக்க, வேந்தனும் உடன்பட்டான். திருநாவுக்கரசரும் கல்லுடன் பிணிக்கப்பட்டுக் கடலில் தள்ளப்பட்டார். அப்பொழுதும் மனங்கலங்காத அப் பெருமகனுர் ''சொற்றுணை வேதியன்'' என அற்றம் காக்கும் அஞ்செழுத்தின் பெருமையினை உள்ள உறைப்புடன் பரவினுர். உடன் கயிறு அறுந்தது. கல் தெப்பமாகி மிதந்தது. வாகீசரும் அதன்மீது வீற்றிருந்தருளினுர்.

நல்வினை, தீவினை ஆகிய கயிறுகளால், ஆணவம் என்னும் கல்லுடன் பிணிக்கப்பட்டு

''அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தாற் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது''

என்று வள்ளுவர் பெருமானுல் பேசப்படுகின்ற பிறவியாகிய பாவக் கடலினின்று நம்மை உய்விப்பது அஞ்செழுத்து. அது ஒரு சிறிய கல்லைக் கரையேற்றுவது வியப்பன்று என்று சேக்கிழார் பெருமான் குறிக்கின்ருர்.

''இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத் தரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ''

**தோன்றுத் துணையாரின் தரிசனம்**

திருநாவுக்கரசரும் 'திருப்பாதிரிப்புலியூர்' என்ற தலத்திற்கு அண்மையில் கரையேறினுர். (இவ்விடத்தைக் கரையேற விட்ட குப்பம் என்று இன்று வழங்குகின்றனர்.) பின்பு ஆலயத்திற்குச் சென்ருர். திங்கட் கொழுந்தணி செஞ்சடைப் பிரானைப் பணிந்தார். ''ஈன்றுளுமாய் எனக்கு எந்தையுமாய்'' என எடுத்து ''தோன்றுத் துணையாய் இருந்தனன் தன்னடியோங்கட்கே'' என்று தோன்றுத்துணையாரைப் போற்றிப் பரவினுர்.



பின்பு திருமாணிக்குழி, திருத்தினைநகர் என்னும் தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவதிகை வந்தடைந்தார். அங்கு நகர மக்கள் அனைவரும் தமது இல்லங்களையும் வீதிகளையும் நன்கு அலங்கரித்து வாக்கின் மன்னவரைக் கோலாகலமாக வரவேற்றனர். அன்னுரும் இடையருது பொழிகின்ற கண்ணீர் வெள்ளத்துடன் திருக்கோயிலினுள் புகுந்து வெறிவிரவு 'கூவிளம்' என எடுத்து ''இறைவன் தன்னை ஏழையேன் நான் பண்டிகழ்ந்தவாறே'' என ஏழைத் திருத்தாண்டகத் திருப்பதிகத்தால் அதிகைக் கிறைவனை அடிபணிந்து உழவாரப் பணி புரிந்து வந்தார்.

**பல்லவன் சைவனுதல்**

இதற்கிடையில் திருநாவுக்கரசர் நிகழ்த்திய அற்புதங்களால் காடவர் கோனின் மனம் சைவத்திற்குத் திரும்பியது. வீட்டு நெறி உணராத சமணர்களின் மொழிகள் கள் யாவும் பொய் என உணர்ந்த குணபரன், பாடலிபுரத்திலுள்ள சமணப் பள்ளிகளையும் பாழிகளையும் இடித்து அக் கற்களைக் கொணர்ந்து திருவதிகையில் ''குணபரவீச்சரம்'' என்ற திருக் கோயிலைக் கட்டுவித்து, சிவபெருமான் திருவடிகளில் அழுந்திய பக்தி பூண்டு, மக்களையும் சிவமாம் செந்நெறியிலே ஒழுகச் செய்தான்.

**சூலக்குறியும் இடபக்குறியும் பொறிக்கப் பெறுதல்**

வாகீசப் பெருந்தகையும் திருவெண்ணெய் நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலிய தலங்களை வணங்கி, திருத்தூங்கானை மாடமாம் திருப்பெண்ணுகடத்தை அடைந்தார்.

திருக்கோயிலினுள் சென்று தூங்கானைமாடச் சுடர்க் கொழுந்தைத் தரிசித்து ''புன்னெறியாம் அமண் சமயத் தொடக்குண்ட இவ்வுடலுடன், யான் உயிர் வாழ விரும்பேன். ஆகையால் யான் உயிர் தரிக்கும் பொருட்டு நின் இலச்சினை இட்டருள்'' எனக் கசிந்துருகி

பொன்னார் திருவடிக்(கு) ஒன்றுண்டு விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற்(கு) இச்சையுண் டேல்இருங் கூற்று(அ கல
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண் (டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே

என்ற திருப்பதிகம் பாடினார்.

சிவபெருமானின் திருவருளாணையின் வண்ணம் ஓர் சிவபூதம் யாரும் அறியாமல் சூலக் குறியையும் இடபக் குறியையும் தோள்களிலே பொறித்துச் சென்றது. அக மகிழ்ந்த வாக்கின் மன்னவரும் எம்பெருமானின் திருவருளினை வியந்து திருத்தவ யாத்திரையினைத் தொடர்ந்தார்.

• •

### தில்லைத் தொல்லோன் தரிசனம்

பின்பு அடிகளாரும் திருவரத்துறை, திருமுதுகுன்றம் முதலிய திருத்தலங்களை வணங்கி, தில்லைநகர் வந்தடைந்தார். பின் வேத ஒலியும் கீத ஒலியும் முழங்குகின்ற எழுநிலை கோபுரங்களைக் கடந்து பொற்சபையினை அடைந்தார். அங்கு ஆனந்த நடனம் புரியும் அம்பலவாணரது எழில் நலத்தை ஆரப் பருகினர். குனித்த புருவத்தையும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும், பனித்த சடையும் பவளம் போன்ற மேனியில் பால் வெண்ணீறும் அணிந்த பெம்மானது,

**ஒன்றியிருந்தும் நினைமின்கள் உந்தமக் கூனமில்லைக்**
**கன்றிய காலனைக் காலாற்கடிந்தான் அடியவற்காச்**
**சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்**
**என்று வந்தாய்**

என்று உவந்தாய் என்று வினவுகின்ற திருக்குறிப்பினை வியந்தார். பிறகு 'கருநட்ட கண்டனை' என்னும் திருவிருத்தமும் 'பத்தனாய்ப் பாடமாட்டேன்' என்ற திருநேரிசையும் பாடிப் பணிந்தார். 'அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்' என்ற திருக்குறுந்தொகையையும் பாடினார்.



அதன்பின் 'திருவேட்களம், திருக்கழிப்பாலை முதலிய தலங்களைத் தரிசித்து மீண்டும் தில்லைக்கு வந்து 'பனைக்கை' மும்மத வேழ முரித்தவர்'' என்று எடுத்து ''அம்பலக் கூத்தனைத் தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ'' என்னும் திருக்குறுந்தொகையையும் அடியார்க்கு எளிவந்து உதவும் இறைவனது கருணைத் திறத்தை வியந்து ''அரியானை அந்தணர் தம் சிந்தையானை'' என்னும் பெரிய திருத்தாண்டகத்தாலும் இறைவனைப் போற்றினார். பின்பு பொன்னம்பலத்துள் நடமிடும் ஐயனைக் கண்டு ''செஞ்சடைக் கற்றை முற்றத் திளநிலா எறிக்கும்'' என்னும் திருநேரிசையும் பாடி மகிழ்ந்தார்.

### அருட்கடலும் அன்புக்கடலும்

சிவபெருமானது திருவருளால் உமை முலைப்பாலுண்ட ஞானக் குழந்தையாம் திருஞானசம்பந்தரைக் காண வாகீசர் விரும்பினார். தில்லையினின்று திருநாரையூர் வழியாக சீர்காழியை வந்தடைந்தார். சூலை நோயின் மூலமாக இறையருள் பெற்ற திருநாவுக்கரசரின் வருகையை அறிந்து திருஞானசம்பந்தரே சென்று வரவேற்றார். வாக்கின் மன்னவரும் புகலிக் கன்றும் ஒருவரை யொருவர் வணங்கித் திருக் கோயிலினுள் புகுந்தனர். இருபெரும் குரவர்களது சந்திப்பினைச் சேக்கிழார் பெருமான்

அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம்
    அன்புசெறி கடலுமாம் எனவும் ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
    புண்ணியக்கண் இரண்டெனவும் புவனம் உய்ய
இருட்கடுவுண் டவர்அருளும் அகில மெல்லாம்
    ஈன்றாள்தன் திருவருளும் எனவும்கூடித்
தெருட்கலைஞா னக்கன்றும் அரசுஞ் சென்று
    செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தார் அன்றே

என அழகாகக் குறிப்பிடுகின்றார்.

ஆலயத்துட் சென்ற இருவரும் வலம் வந்து இறைவனை வணங்கினார்கள். திருஞானசம்பந்தர் அப்பர் பெருமானை நோக்கி 'நீர் உங்கள் பெருமானைப் பாடுவீராக' என்றார். அது கேட்ட அரசும் 'பார் கொண்டு மூடி' என்ற திருப்பதிகத்தால் தோணியப்பரையும் பெரியநாயகி

அம்மையையும் துதித்து, சின்னாள் திருஞானசம்பந்தருடன் உறைந்து பின்பு சிவ தல யாத்திரை செய்யும் விருப்பால் விடைபெற்றுப் புறப்பட்டார். ஞானசம்பந்தப் பெருமானும் அவரைத் திருவோலக்கா வரை சென்று வழி அனுப்பினார்.

## திருவடி தீட்சை

அப்பர் பெருமான் திருக்கருப்பறியலூர், திருப்புன்கூர், திருநீரூர், திருக்குறுக்கை வீரட்டம், திருநின்றியூர், திருநனிபள்ளி, திருச்செம்பொன்பள்ளி, திருமயிலாடுதுறை, திருத்துருத்தி, திருவேள்விக்குடி, திருஎதிர்கொள்பாடி, திருக்கோடிக்கா முதலிய தலங்களைத் தரிசித்துத் திருவாவடுதுறை வந்தடைந்தார். 'ஆவடுதண் துறையாரை அடைந்துய்ந்தேன்' என்ற கருத்துள்ள திருத்தாண்டகம், திருநேரிசை, திருச்சந்த விருத்தம் ஆகிய செந்தமிழ்ப் பாமாலைகள் தொடுத்து ஆண்டவனுக்குச் சாத்தினார். அங்குநின்று திருஇடை மருதூர், திருநாகேசுவரம், திருப்பழையாறை முதலிய தலங்களைக் கடந்து திருச்சத்திமுற்றம் வந்தடைந்தார். அங்கு சிவக்கொழுந்தீசரையும் உமையம்மையையும் வணங்கி ''கோவாய் முடுகி' என்று எடுத்து 'கூற்றம் வந்து குமைப்பதன் முன், பூவார்ந்த உமது சேவடியினை என் தலைமேல் வைத்தருள்க' என்ற கருத்தமைந்த திருப்பதிகம் பாடினார். இறைவனும் இவரைத் திருநல்லூர்க்கு வா என அருளினார்.

இறைவனது ஆணையினைச் சிரமேற்றாங்கி அப்பரும் சென்றார். சிவபெருமானும் தமது திருவடிகளை அவரது சென்னியின் மிசைச் சூட்டினார்.

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும் பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்

ஆளுடை அரசும் 'நினைந்துருகும் அடியாரை' என்ற திருத்தாண்டகம் பாடி இறுதியில் 'திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானார் நல்லவாறே' எனப் போற்றிப் பரவினார். பின்பு திருக்கருக்கோவூர், திருவா



ரூர்ப் பசுபதீச்சரம், திருப்பாலைத்துறை முதலிய தலங்களைத் தரிசித்துப் பின் திருப்பழனம் பணிந்து திங்களூரை அடைந்தார்.

## அப்பூதி அடிகளின் மகனைப் பாம்பு தீண்டல்

திங்களூரில் அப்பூதி அடிகள் என்பவர் திருநாவுக்கரசர்பால் பேரன்பு கொண்டு தாம் நடத்தும் தண்ணீர்ப் பந்தல், தமது இல்லம், மக்களனைவருக்கும் திருநாவுக்கரசரது திருப்பெயரினையே சூட்டியிருந்தார். திங்களூரையடைந்த வாகீசரும் அப்பூதி அடிகளாரது மனையினையடைந்தார்.

அடிகளாரைக் கண்ட அப்பூதியார் மகிழ்ச்சிக் கடலில் முக்குளித்தார். தமது இல்லத்தில் திருவமுதுண்ண அழைத்தார். அப்பரும் இசைந்தார். திருவமுதும் தயாராகியது. அப்பூதி அடிகளாரும் தமது மூத்த மகனாகிய மூத்த திருநாவுக்கரசை அழைத்துத் திருவமுது படைக்க வாழையிலை அரிந்து வரும்படி ஏவினார். அவ்வாறே வாழை இளங்குருத்தை அரியும் பொழுது நாகம் தீண்டி மைந்தன் உயிர் துறந்தான். இதை அறிந்த பெற்றோர்கள், மைந்தன் இறந்ததை அறிந்தால் அடிகள் அமுதுண்ண மறுப்பர் என அஞ்சி இறந்தவனை மறைத்து வைத்தனர். திருநாவுக்கரசரும் திருவருளின் திறத்தினால் நிகழ்ந்ததை அறிந்து சவத்தைத் திருக்கோயிலின் முன் கொணரச் செய்து 'ஒன்று கொலாம்' என்ற பதிகம்பாட விடம் இறங்கியது. குழந்தையும் துயில் நீங்கி எழுவதைப்போல எழுந்தான். மைந்தன் உயிர் பெற்றெழுந்ததைக் குறித்து மகிழாமல் நாவுக்கரசர் அமுதுண்ணக் காலம் தாழ்ந்துவிட்டதே என்று அன்பின் திருவுருவாம் அப்பூதியார் கலங்கினார். அவரது வருத்தத்தை மாற்ற எண்ணி, அப்பரும் திருவமுது கொண்டு சில நாட்கள் அவருடன் தங்கியிருந்தார்.

— தொடரும்

---

அவர் காணப்படாமற் காண்பவர், கேட்கப் படாமற் கேட்பவர், நினைக்கப்படாமல் நினைப்பவர், அறியப்படாமல் அறிபவர். அவர் அன்றி காண்பவர் இல்லை. அவர் அன்றி கேட்பவர் இல்லை. அவர் அன்றி நினைப்பவர் இல்லை. அவர் அன்றி அறிபவர் இல்லை. அவரே உன் ஆத்மா, அந்தர்யாமி, அழிவற்றவர். (111-7-23) —உபநிடதம்.

# இருள் கடியும் கதிர்வேலா!

(கணேஷ்)

ஒருசிறிது பொழுதுமுனை நினையாதே
உனதருளைப் பெறமனதில் விழையாதே
பெருகிவளர் சிறுமைகளை மகிழ்வாகப்
பெறமுயல்வன் புவியிலவை பெரிதாக;
மருவுகுற மகள்மணந்த மலையோனே!
மலைமகளின் புதல்வ!இருள் கடிவோனே!
மருளகல எனதுமனத் தெழவேண்டும்;
மனதிலிருள் விலகஒளி தரவேண்டும்.

எனதறிவின் சிறுமைதனை யுணராமல்
எழில்பெருகு முனதியல்பை யறியாமல்
வினைபெருகப் புவியில்நிகழ் செயல்யாவும்
வெறுமறிவில் தெரியுமென உளமீதில்
நினைவன்.உனை நினைப்பவர்கள் இருள்மீதில்
நீந்துபவர் எனஎண்ணி இறுமாந்தேன்.
தினமுமுன தொளிமனதில் விழவேண்டும்
திருநடன மிடுமுதல்வன் புதல்வோனே!

உலகதனில் உளபொருட்கள் தனிலெல்லாம்
உளமழிய மயங்கிடுவேன் தினமெல்லாம்;
அலையுமென துளம்பொன்பெண் புவிமீதே
அவைமனதில் தருமிடர்கள் சிலவோதா?
உலையிலிடு மெழுகென உருகாமல்
உனையழுது தொழுதுபெற நினையாமல்
நிலைதவறி உலகில்விழுந் தழிவேனே!
நினதடிகள் தமைநினைந்து எழுவேனே?

மலைமகளின் மடிதவழு மிளையோனே!
மழலைதவழ் குழவிநிலை பெறவேண்டும்.
அலைகள்நிறை குமுறுகடல் எனதுள்ளம்;
ஆசையெனும் புயலினிடை உயிர்வள்ளம்
நிலைதவறி நெறிபிசகி விழுமுன்னே
நினதடிகள் தமையடைந்து விடவேதான்
கலைதவழு மலைகளுறை கதிர்வேலா!
கடிதிலுன தருளையெனக் கருள்வாயே!

## ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| தெய்வீக வாழ்க்கைச் சங்க மலர் | | ... | 1–25 |
| ஸ்ரீ கதிரைமணி மாலை | (பரமஹம்சதாசன்) | ... | –50 |
| தீங்கனிச்சோலை | ,, | ... | 2–50 |
| அறிவுரைக்கதைகள் | (சுவாமி சிவானந்தர்) | ... | –65 |
| நானார்? | ,, | ... | –25 |
| இளங்கோவின் கனவு | (செ. நடராசன்) | ... | 2–25 |
| ஆத்மநாதம் | (சுத்தானந்த பாரதியார்) | ... | 3–00 |
| கீதாயோகம் | ,, | ... | 2–50 |
| பாட்டாளி பாட்டு | ,, | ... | 1–50 |
| கூட்டு வழி பாடு | | ... | –30 |
| கந்தரநுபூதி | [பொழிப்புரையுடன்] | ... | –25 |
| மார்கழிப் பாடல் | | ... | –20 |
| நவராத்திரிப் பாடல் | | ... | –30 |
| ஆத்மஜோதி மலர் | | ... | 2–00 |

---

## வாய்வு சூரணம்

உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, மலக் கட்டு, மலபந்தம், அஜீர்ணம், கை கால் அசதி, பிடிப்பு, பசியின்மை, வயிற்று வலி, பித்த மயக்கம், பித்த சூலை, புளியேப்பம், நெஞ்சுக் கடுப்பு முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரண சக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச் சிறந்த சூரணம்.

தபால் செலவு உட்பட டின் ஒன்று 4 ரூபா 25 சதம்

[பத்தியமில்லை]

சம்பு இன்டஸ்ட்ரீஸ் – அரிசிப் பாளையம் சேலம் -9 [S. I.]

இலங்கையில் கிடைக்குமிடம்:-
ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி
போன் – 353

மலாயாவில் கிடைக்குமிடம்:-
ஸ்ரீ கணபதி & கம்பெனி,
66, பெல்பீல்டு ஸ்ட்டிரிட், ஈப்போ P, O. [மலாயா.]

Registered at the G. P. O. as a Newspaper. M. L. 59/300

## சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்,

இன்று உங்கள் கையில் பதினாறாவது ஆண்டு முதலாவது சுடர் கிடைக்கின்றது. இத் தீபாவளித் திருநாளிலே ஜோதியின் புத்தாண்டுச் சந்தாவை அனுப்பி வைப்பதன் மூலம் உங்கள் ஜோதிக்குத் தீபாவளிப் பரிசினை அளிப்பீர்களாக.

இந்தியாவிலுள்ள அன்பர்கள் தமது சந்தாக்களை
வழக்கம் போல்

**R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ்,**

அரிசிப்பாளையம், சேலம்—9

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

**ஆத்மஜோதி நிலையம்,**
நாவலப்பிட்டி — சிலோன்.
போன் — 353

## ஆத்மஜோதி மலர்

நீங்கள் எதிர்பார்த்திருந்த 'ஆத்மஜோதி மலர்' வெளிவந்து விட்டது. மலரினுள்ளே நாற்பதுக்கு மேற்பட்ட பெரியார்களின் கருத்துக்கள் உங்களுக்கு விருந்தாகின்றன. நூற்றைம்பது பக்கங்களிலும் ஆத்மீகக் கருத்துக்கள் சிறந்து விளங்குகின்றன. முகப்பில் ''என்னை எனக்கறிவித்த எங்கள் குருநாதன்'' மூவர்ணப் படத்துடன் காட்சி தருகின்றார். அவரை நினைப்பவர்க்கெல்லாம் பரகதி உண்டு.

விலை தபாற் செலவுட்பட 2—50 ஆகும்

**ஆத்மஜோதி நிலையம்,**
நாவலப்பிட்டி — சிலோன்.
போன் — 353

இப்பத்திரிகைஆத்மஜோதிநிலையத்தாருக்காக ஆத்மஜோதி அச்சகத்தில் திரு. நா விநாயகமூர்த்தியால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.17-11-63